ACC. No. 12146

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧ | விக்ருதி ௵ மாசி ௴ | பகுதி ௨

பிரார்த்தனை

தேவி தோத்திரம்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

அரவ குண்டலி யகில மண்டலி அமர சண்டிசி கண்டியே
குரவ ணிங்தொளிர் குழலி கோமள குடில நயனவி நோதினி
பரத மோகன பவுரி கொண்டிடு பதச ரோருக சோபினி
புரநி வாரணி புனித ஆரணி புவன காரணி பூரணீ 8

[அரவ குண்டலி—பாம்பு வடிவமான குண்டலினி சக்தி. சண்டி—துர்க்கை. சிகண்டி—அலி. குரவு—குரவமலர். பவுரி—மண்டலமாய் ஆடும் கூத்து. சரோருகம்—தாமரை.]

ஞான மேயுயர் நாத மேநக நாரி யேயுப காரியே
மோன மேயதி மோத மேகுல முகுட மேபர குடிலையே
வான மேசுக வாணி யேமத வார ணீயவ தாரணீ
தான மேபிர சாத மேபிர தான மேசுர தாருவே 9

[நகநாரியே—மலைப் பெண்ணே. மோதம்—மகிழ்ச்சி. முகுடம்—மகுடம். குடிலை—சுத்த மாயை. வாணி—ஸரஸ்வதி. சுர தாரு—தேவலோக மரம், கற்பக விருஷம்.]

சனன நாசனி தவநி வாசனி சகவி லாசினி வாசனி
தினவி நோதினி யோக வாதனி சேத னீபிர போதினி
மனன தாயகி நயன சாயகி வரதநாயகி வந்துநின்
அனக சுந்தர பரிபு ரம்பணி யமல பங்கயம் அருள்கவே 10

[சனனம்—பிறப்பு. தவ நிவாசனி—தவத்தில் உறைபவள். வாசனி—வாசனையுடையவள். யோக ஆதனி—யோகா சனத்திலிருப்பவள். பிரபோதினி—எழுப்புவள். தாயகி—ஆதாரம். சாயகி—அம்பையுடையவள். பரிபுரம் —சிலம்பு. பங்கயம்—தாமரையாகிய திருவடி,]

(முற்றிற்று)

—நாவலர்

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

(ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர்)

உரிமை

இரு சக்திகள் இயற்கை முழுவதும் வேலை செய்து வருவது போல் தோன்றுகின்றன. இவற்றில் ஒன்று ஓயாது வேறுபாட்டை உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றது, மற்றொன்று அதேயளவு ஓயாது ஒற்றுமையை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றது; வெவ்வேறான தனித்தனி மனிதர்களை ஆக்க ஒன்று முயலுகின்றது, மற்றொன்று தனி மனிதர்களை ஒரு தொகுதியாக்கி, எல்லாவித வேறுபாட்டுக்குள்ளும் இருக்கும் ஒரே தன்மையை வெளிக் கொண்டுவர முயலுகின்றது. இயற்கையிலும் மனித வாழ்க்கையிலும் ஒவ்வொரு துறையிலும் இவ்விரண்டு சக்திகள் புகுந்து வேலை செய்வதாகத் தெரிகிறது. சட உலகிலே, எப்போதும் இவ்விரு சக்திகளும் மிகத் தெளிவாகப் புலப்படும்படி வேலை செய்து வருவதை நாம் காண்கிறோம்; இவை முறையே தனிமனிதர்களை வெவ்வேறாகப் பிரித்து, ஒவ்வொருவரும் மற்றை யாரினும் மேலும் மேலும் வேறுபட்டு விளங்கும்படிச் செய்தும், மீண்டும் தனி மனிதர்களை ஜாதிகளாகவும் இனங்களாகவும் ஆக்கி, வடிவத்திலும் நடையுடை பாவனைகளிலும் ஒப்புகளை வெளிக்கொணர்ந்தும் வருகின்றன. மனிதனது ஸமூக வாழ்விலும் இதுவே காணப்படுகின்றது. மக்கள் ஸமூகவாழ்வைத் தொடங்கிய காலமுதலே, இவ்விரு சக்திகளும் வேற்றுமையையும் ஒற்றுமையையும் உண்டாக்குமாறு வேலை செய்து வந்துள்ளன. இவற்றின் செயல்கள் வெவ்வேறு வகையாகத் தோன்றுகின்றன, வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர் பெற்று வந்துள்ளன. ஆனால் முக்கியமான அம்சம் எல்லாவற்றிலும் அமைந்துள்ளது: அதாவது, வேறுபாட்டை வளர்த்து வரும் ஒன்றும், ஒற்றுமையை வளர்த்து வரும் மற்றொன்றும்; ஜாதியை உண்டாக்கிவரும் ஒன்றும், அதனை உடைத்து வரும் மற்றொன்றும்; வகுப்புகளையும் உரிமைகளையும் படைத்து வருவதொன்றும், அவற்றை அழித்துவரும் மற்றொன்றும்— இவையே அனைத்திலுமுள்ள ஸாரம்.

பிரபஞ்சம் முழுதுமே இவ்விரண்டு சக்திகட்கும் போர்க்களமாகத் தோன்றுகிறது. ஒரு பக்கத்தில் கூறப்படுவதாவது: ஒற்றுமையை விளைக்கும் முறை உள்ளதெனினும், அது மரணத்தை நோக்கிச் செலுத்துமாதலின், நமது முழு பலத்தோடும் அதனை எதிர்த்தல் வேண்டும்; பூரணமான ஏகத்தன்மை பூரணமான அழிவேயாகும்; ஏனெனில் இப்பிரபஞ்சத்தில் வேலைசெய்து வரும் வேற்றுமைப் படுத்தும் முறை நின்றுவிடும் போது, பிரபஞ்சமும் முடிவடையும். நம் முன் உள்ள நிகழ்ச்சிகட்குக் காரணமாவது, வேறுபடுத்தும் முறையே; ஒருமைப்படுத்தும் முறையோ அவை யனைத்தையும் ஒரு படித்தான உயிரற்ற சடப் பொருளாக ஆக்கிவிடும். அத்தகைய நிலையை மனிதர் நீக்க விரும்புவார். நம்மைச் சுற்றி எங்கும் காணும் எல்லாப் பொருள்கட்கும் நிகழ்ச்சிகட்கும் இதே வழக்கு பொருத்தமாகும். தூல உடலிலும் ஸமூகப் பாகுபாட்டிலும் முற்றிலும் ஒரே படித்தான தன்மையால் இயல்பான மரணமும் ஸமூகச் சாவும் விளையும் என்று எடுத்துக் காட்டப்படுகிறது. நினைப்பிலும் உணர்ச்சியிலும் முற்றிலும் ஒரேமாதிரியான தன்மை உண்டாகுமாயின், மன அழிவும் சீர்குலைவும் விளையும். ஆதலின் ஒரு படித்தான தன்மை நீக்கத் தகுந்ததேயாம். இதுவே ஒரு பக்கத்தாரது வழக்காகும்; ஒவ்வொரு நாட்டிலும், பற்பல காலங்களிலும் இதே வழக்கைத்தான் சற்று வார்த்தைகளை மாற்றிப் பலரும் உரைக்கின்றனர். இந்தியாவிலுள்ள பிராம்மணர்கள் பாகுபாடுகளையும் ஜாதிகளையும் ஆதரிக்க விரும்பும் போதும், ஸமூகத்தின் ஒரு பகுதியினரின் உரிமைகளை, ஏனைய எல்லோருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, ஆதரிக்க விரும்பும் போதும், ஏறக்குறைய அதே வழக்கைத் தான் கூறுகிறார்கள். ஜாதி அழியின் ஸமூகம் அழிவதற்கு அது ஏதுவாகும் என்கின்றனர்; தமது ஸமூகமே அனைத்தினும் மிக நீண்ட காலம் வாழப் பெற்றது என்ற சரித்திர சம்பந்தமான உண்மையையும் துணிவோடு எடுத்துக் காட்டுகின்றனர். ஆதலின் அவர்கள், ஒரு சிறிது பிரமாணத் தோற்றத்தோடு கூறுவதாவது; ஒரு மனிதனை அனைத்தினும் மிக நீண்ட காலம் வாழச் செய்வது எதுவோ, அதுவொன்றே அதனினும் சுருங்கிய வாழ்வைத் தருவதைப் பார்க்கிலும் மேலானது என்பது திண்ணம்.

இதற்கு மாறாக, ஒருமைக் கருத்தினை ஆதரிப்பவரும் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்துள்ளனர். உபநிடதங்களின் காலமும்,

புத்தர் இயேசுநாதர் முதலான மற்றெல்லாச் சமயப் பெருங்குரவர்களின் காலங்களும் தொடங்கித் தற்காலம் வரை. நவீன அரசியற் கட்சியாரது அவாக்களிலும், நலியப் பட்டோரும் நசுக்கப்பட்டோருமான மக்களும், உரிமைகள் பறிக்கப்பட்டு நிற்கும் ஏனைய எல்லா மக்களும் தமக்கெனக் கேட்கும் உரிமைகளிலும் வெளித்துலங்குவது, இந்த ஒற்றுமையையும் ஒரு படித்தான தன்மையையும் வற்புறுத்தும் குரலே தான். ஆனல் மனித இயற்கை தன்னைத்தானே வற்புறுத்திக் கொள்ள வல்லதாகும். யாதேனும் ஒரு நன்மையைப் பெற்றிருப்போர் அதை விடாது போற்றி வைக்கவே விரும்புவர்; அவர்களது வழக்கு எவ்வளவு ஒருதலைச் சார்பாயும் பண்பாடற்றதாயும் இருப்பினும், அவர்கள் அதனை விடாது பற்றத்தான் வேண்டும். இது இருதிறத்தார்க்கும் பொருந்துவதேயாகும்.

தத்துவ நூற்றுறையிலும் இவ் வழக்கு வேறொரு வடிவங் கொள்கிறது. பௌத்தர் கூறுவதாவது: உலக நிகழ்ச்சிகட்கு நடுவே ஒற்றுமையை ஊட்டும் எதனையும் நாம் நாட வேண்டியதில்லை, இவ்வியாவகாரிக உலகக் காரியங்களில் திருப்தியடைவதே நமது கடமையாகும். இவ்வேறுபாடு எவ்வளவு துயரத்தையும் பலவீனத்தையும் தருவதாகத் தோன்றினும், அதுவே வாழ்வின் ஸாரமாகும்; வேறெதனையும் இங்குப் பெற இயலாது. ஆனல் வேதாந்தியரோ வேறுவகையாகப் பின்வருமாறு கூறுகின்றனர்: "வேறுபாட்டைக் காணுதே; ஒருமைக்கே மீண்டும் செல்க" என்று. பௌத்தர் "ஒருமையைக் களைந்தெறிக; அது ஒரு மயக்கமே" என்கின்றனர். மதத்துறையிலும் தத்துவத்துறையிலும் முற்கூறிய கருத்து வேறுபாடுகளே இன்றுவரை நிலைத்து வந்துள்ளன; ஏனெனில், அறிவைப் பற்றிய கொள்கைகளை மொத்தம் திரட்டினுலும் மிகச் சுருக்கந் தான். தத்துவ சாஸ்திரமும் தத்துவ அறிவும், சமயமும் சமய அறிவும் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னே பூரண நிலையை அடைந்து விட்டன; அவ்வுண்மைகளையே வெவ்வேறு மொழிகளில் நாம் திரும்பிக் கூறி வருகின்றேம்; சில சமயங்களில் புதிய விளக்கங்களைச் சேர்த்து அவற்றை வளப்படுத்துவது மட்டும் செய்கிறேம். ஆதலின் இன்றைக்கும் இதுவே போராட்டம். ஒரு திறத்தார் நமக்குத் தோன்றுகிறபடியே, இவ் வேறுபாடுகள் அனைத்தையும் நாம் விடாது போற்றி வைக்கத்தான் வேண்டும் என்பர்; வேறுபாடு இருக்கத்தான் வேண்டும், ஏனெனில் அது நீங்குமாயின், எல்லாம் பறந்து விடும் என்று, உயர்ந்த வழக்கைக் கூறுவாரைப் போல் எடுத்துக் காட்டுகின்றனர். வாழ்வென்பதன் பொருளே இவ்வேறுபாட்டால் விளைவதொன்றும் என்பர். அதேசமயம் மறுதிறத்தாரும் ஒருமையையே வீரத்தோடு எடுத்துரைபபர்.

அறநூலுக்கு வருவோமாயின், அங்கே இதனினும் வெகுதூரம் விலகியிருக்கும் ஒரு தன்மையைக் காண்கிறேம். ஒருக்கால் இப்போராட்டத்தினின்றும் வெகுதொலை துணிந்து விலகி நிற்கும் ஒரே சாஸ்திரம் அதுவே போலும். ஏனெனில் அறம் ஒருமையையே பற்றி நிற்கும்; அதற்கு ஆதாரம் அன்பேயாம். அது இந்த வேறுபாட்டைக் காணுது; அறத்தின் ஒரே நோக்கமாவது இந்த ஒருமையே, இந்த ஒரே தன்மையே. மனிதவர்க்கம் இதுவரை கண்டுபிடித்துள்ள மிகவுயர்ந்த அறநூல் முறைகள் வேறுபாட்டை அறியாதனவாம்; அதைக் கண்ணுற் பார்க்க அவர்கட்கு அவகாசம் இல்லை; அந்த ஒரே தன்மையை அடைவதே அவர்களது முடிபு. இந்தியாது மனது—அதாவது, வேதாந்தியரது மனது எவ்வளவோ தொலை பகுப்பு முறையால் ஆராய்ந்த பின்னும் இந்த ஒருமையையே கண்டது; அனைத்தையும் இந்த ஒருமைக் கருத்தென்னும் ஆதாரத்தின் மீதே நிலைநாட்ட விரும்பியது. ஆனல் அதே நாட்டில், யாம் முற் கூறியவாறே, அவ்வொருமையை எங்கும் காணமாட்டாத வேறு மனங்களும் (பௌத்தர்களும்) இருக்கத்தான் செய்தன. அவற்றுக்கு எல்லா உண்மையும் வேறுபாட்டின் தொகுதியேயாயிற்று, ஒரு பொருளுக்கும் மற்றொன்றுக்கும் சம்பந்தமே இல்லாது போயிற்று.

பேராசிரியர் மாக்ஸ்முல்லர் தமது புத்தகங்கள் ஒன்றில் கூறியிருக்கும் கதையொன்று, கிரேக்கரைப் பற்றிய ஒரு பழங்கதை எனக்கு நினைவு வருகிறது. ஒரு பிராம்மணர் சாக்கரடீஸை ஆதன்ஸ் நகரில் போய்ப் பார்த்தார். பிராம்மணர் அவரிடம் "மிக உயர்ந்த அறிவு யாது?" என்று வினவினர். அதற்கு சாக்கரடீஸ் கூறிய மறுமொழியாவது; "மனிதனை அறிதலே எல்லா அறிவின் நோக்கமும் பயனும் ஆகும்" அப்போது பிராம்மணர் அவரிடம் "ஆனல் கடவுளை அறியாது நீர் மனிதனை எவ்வாறு அறியமுடியும்?" என்று பதிலளித்தார். ஒரு கட்சி, அதாவது கிரேக்கரின் கட்சி, மனிதனைப் பற்றிய அறிவை வற்புறுத்தி வந்தது; தற்கால ஐரோப்பாவின் கட்சியும் அதுவே. உலகத்தி

லுள்ள பழைய மதங்கட்குப் பெரும்பான்மையும் பிரதிநிதியாயுள்ள இந்தியக் கட்சியோ கடவுளைப் பற்றிய அறிவை வற்புறுத்தி வந்தது. ஒன்று இயற்கையில் கடவுளைக் காண்கிறது; மற்றொன்று கடவுளில் இயற்கையைக் காண்கிறது. ஒருக்கால் தற்காலத்தாராய நாம் இவ்விரண்டு கட்சிகளினின்றும் ஒதுங்கி நின்று, முழு உண்மையையும் ஒரு பக்கமும் சாயாது காணும் உரிமையைப் பெற்றிருக்கலாம். வேறுபாடு உள்ளது என்பது உண்மையே; வாழ்வு நடைபெறவேண்டின் அது கட்டாயமே. ஆனால் அதோடு, இவ்வேறுபாடுகட்கு உள்ளுய் அவைவாயிலாகவும் ஒற்றுமையைக் காண வேண்டும் என்பதும் உண்மையே. இயற்கையிலேகூட கடவுள் காணப்படுகிறார் என்பது உண்மையே; ஆனால் கடவுளிடத்து இயற்கை காணப்படுவதும் உண்மைதான். மனிதனைப் பற்றிய அறிவு மிக உயர்ந்த அறிவே; மனிதனை அறிந்தால் மட்டுய் நாம் கடவுளை அறிய இயலும். ஆனால் கடவுளைப் பற்றிய அறிவே மிகவுயர்ந்த அறிவு என்பதும், கடவுளை அறிந்தால் மட்டும் நாம் மனிதனைக் அறிய இயலும் என்பதும் உண்மையே. இக்கருத்துக்கள் வெளிப் பார்வைக்கு ஒன்றோடொன்று முரண் பட்டதாகத் தோன்றினபோதிலும், மனித இயற்கைக்கு அவையிரண்டும் அவசியமே. பிரபஞ்ச முழுதும் வேற்றுமைக்குள் ஒற்றுமையின் விளையாட்டும், ஒற்றுமைக்குள் வேற்றுமையின் விளையாட்டும் தான். பிரபஞ்ச முழுமையும் இவ்வேறுபாடு ஒற்றுமையெனும் இரண்டின் விளையாட்டேயாம். முழுப்பிரபஞ்சமும் எல்லையற்ற பொருளில் எல்லையுற்ற பொருளின் விளையாட்டேயாம். ஒன்றை அங்கீகரிக்க, மற்றொன்றையும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனாலும் இரண்டையும் ஒரே விதக் காட்சியிற் கண்ட உண்மைகளாக, ஒரே அனுபவத்தாற் பெற்ற உண்மைகளாக நாம் கொள்ள முடியாது; எனினும், எப்போதும் இம்மாதிரித்தான் போய்க் கொண்டிருக்கும்.

(தொடரும்

குருதேவர் உபதேச மணிமாலை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

740—உண்மையை உள்ளே தேடுக

நள்ளிரா வொருவன் புகைச்சுருட் டிற்காய்
நன்னெருப் பெய்திட வேண்டி
உள்ளிரா நின்ற வொண்சுடர்த் தீபம்
ஒருகையி லேந்தியாங் கயலோன்
எள்ளிடா மனைசென் றெழுப்பியொண்
ணெருப்பெற்
கீகென நின்கரத் தெரிதீக்
கொள்ளிலா யென்றான், கொளத்தகும்
பொருளுட்
குலவுவ துழலுவர் புறமே. 143

(நள்ளிரா - நடு ராத்திரி. ஆய் - தெரிந்தெடுத்த உள்இராநின்ற-உள்ளிருந்த. நெருப்பு எற்கு ஈக-தீ எனக்குக் கொடு. குலவுவது-விளங்குவது.)

746—தேக புத்திக்கு அத்துவிதம் சோரது

நவின்றிடும் பிரம நானென வுரைப்பன்
ஞானயோ கம்பயில் பவனிங்
கவிந்திடுஞ் சடத்தை யான்மன மென்ன
வகங்கரு திடினது தீதாம;
குவிந்திடு மான்ம வாழ்வினின் மேன்மை
கொள்ளிடா தழித்திடு மன்னோன்
கவிழ்த்திட மற்றோர் தம்மை வஞ்சித்துக்
கடிதுதன் னையும்கெடுக் கின்றான் 144

(அவிந்திடும்-அழியும். அகம்-மனதில்.)

748—மனத்திற் பக்தியை பூசுக

வெறுவிய வாடி தனிவுருப் பதியா
விளங்கிர சாயனப் பொருண்மேல்
நெறிபெறப் பூசி நினையுரு வெழுதில்
நினைந்தவா பதியுமங் கதுபோல்
செறிவுறப் பத்தி யெனுமிர சத்தைத்
தீதறு மனத்திடைப் பூசின்
அறிவரு மிறைவன் வடிவினை யாங்கண்
அழகுறப் பதித்திடலாமே. 145

(வெறுவிய ஆடி-வெறும் கண்ணாடி. நெறி பெற-முறையாக. இரசம்-இரசாயனப் பொருள்.)

765—பக்திக்கு வேண்டிய குணங்கள்

கனவிவே கம்வை ராக்கியஞ் சீவ
கருணைசா துக்களின் சேவை
தினமுநல் லோர்தங் கூட்டுற வீசன்
திருப் பெயர்ப் புகழ்ச்சிநல் வாய்மை

இனமுறு மின்ன வெழிற்குணம் வழியா
யெம்பிரான் மீதுமெய்ப் பத்தி
மனமதி லோங்கி வளர்ந்திடும், ததும்பி
வழிந்திடும் பத்திநல் வெள்ளம். 146

(இனமுறு இன்ன-இவ் இனத்தைச்சேர்ந்த; இப் போர்ப்பட்ட)

767—பகவான் காந்த மலை

மலிகடற் கீழே மன்னிடுங் காந்த
மலை கல மிழுத்தவற் ருணி
சலமுறப் பிடுங்கிப் பலகைகள் கழற்றிச்
சலத்தகத் தவற்றினை யழுத்தும்;
நலமுறு முயிரைப் பரமெனுங் காந்தம்
நவிலுயி ரறிவினை யுந்தன்
னலனையு நீக்கிப் பத்தியாங் கடலில்
நலிவற விழுத்தழுத் திடுமே. 147

(கலம் இழுத்த வற்று-கப்பலை இழுத்தது போல். உயிரறிவு-ஜீவபோதம். தன்னலன்-சுயநலம்.)

768—பிரேமையின் படிகள்

சாற்றிடுஞ் சமர்த்தஞ் சமஞ்சச மற்றுஞ்
சார்ந்தசா தாரண மென்னப்
போற்றிடும் பத்தி மூவித மாகும்;
பொருந்திடு மன்பன தின்பம்
ஆற்றுதல் சமர்த்தந் தன்னல மின்றாம்;
அழிவற விருவர்தந் நலமும்
தேற்றுதலாகுஞ் சமஞ்சசம், தனக்கே
செய்நலம் பேணிடல் பொதுமை. 148

(பொதுமை-சாதாரணம்.)

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேலூர் மடம், 1929, ஏப்ரல் 10, புதன்

உணவு உட்கொள்ளும் சமயத்தில் மகாபுருஷ மகராஜர் இவ்வாறு கூறினர்:

"எனக்குச் சாதாரண அரிசிச் சோறும் காய்கறியும உண்பதிலேயே விருப்பம் உண்டு; அதிலேயே எனக்குத் திருப்தி ஏற்படுகின்றது. இதோ பார்க்கின்றீர்களே இந்த உண்டி வகைகளையெல்லாம், (கைப்பு நிறைந்த காய்கறிக் குழம்பு ஒன்றினைக் காட்டி) இவற்றையெல்லாம் நான் மருந்தைப் போல் சாப்பிட்டு வைக்கின்றேன்".

படல் என்ற ஒரு கறிவகையைச் சாப்பிடும் பொழுதும் மகாபுருஷர் இவ்வாறு பகர்ந்தார். "உண்மையிலேயே உணவு உட்கொள்ளுவது ஔஷதம் சாப்பிடுவது போன்றதே யாகும். சங்கராசாரியார் 'பசியாகின்ற நோயின் பொருட்டுச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். தினந்தோறும் பிக்ஷை எடுத்துப் பெற்ற அன்னமாகின்ற ஔஷதத்தைச் சாப்பிடுங்கள்.' என்று கூறியுள்ளார். பசி என்பது ஒரு நோய் தான். மருந்து எவ்வாறு நோயைப் போக்குகின்றதோ, அவ்வாறு பசியாகின்ற நோயை உணவு போக்கி விடுகின்றது. இதை மனதிற்கொண்டு நாம் உணவுகொள்ளவேண்டும். சங்கராசாரியார் ஒரு மகாஞானி, ஆதலால் தான் அவர் இவ்வாறு உபதேசித்துள்ளார். ஆத்மாவோ எனில் பசி முதலான விஷயங்கள் அற்றது. அது நிர்விகாரமானபொருள், சுத்த சைதன்ய ஸ்வருபமானது. பசி, தாகம் முதலிய விஷயங்களெல்லாம் ஆத்மாவினுடைய இலக்ஷணங்கள் ஆகா. சரீரத்தினுடைய இலக்ஷணங்களே யாகும்."

பேலூர் மடம் 1929, ஏப்ரல், 18

பிற்பகல் வேளை. மணி சுமார் ஐந்து இருக்கும். துறவி ஒருவர் மகாபுருஷ மகராஜருக்கு நமஸ்காரம் செய்தார். மகாபுருஷர் "ஏதாவது சொல்ல வேண்டியது உண்டா?" என்று வினவினர். அந்தத் துறவி அந்த நேரத்தில் வருவது வழக்கமில்லை யாதலால் இவ்வாறு கேள்வி எழுந்தது.

துறவி: நேற்று ம—வைப் பார்த்து வரச் சென்றேன். அவர் நீண்ட நேரம் இராமகிருஷ்ணருடைய போதனைகளை யெல்லாம் எடுத்துரைத்தார்.

மகாபுருஷர்: ஆகா! அவர் இராமகிருஷ்ண தேவருடைய மகா பக்தர் ஆவார். அவரிடமிருந்து இராமகிருஷ்ணருடைய மொழிகளைத் தவிர வேறு எதையுமே கேட்க முடியாது.

துறவி: மகராஜ்! என் மனதில் பெரிய அசாந்தி ஏற்பட்டுள்ளது. சாதனையோ ஒரு சிறிதும் செய்ய முடியவில்லை, நாட்களோ கழிந்து வருகின்றன. எனக்கு என்ன வழி உண்டு?

மகாபுருஷர்: அன்பரே! இறைவனிடம் சரணடைந்து கிடப்பீராக. அவருடைய கிருபை இல்லாவிடில் ஒன்றும் ஏற்படாது. ஜபம், தியானம் செய்வதால் மட்டும் ஒரு மனிதன் இறைவனை அடைந்து விட முடியுமா, என்ன? இறைவனாகத் தயைகாட்டிக் காட்சியளித்தாலாகில் அவனைக்காண முடி

யும், இல்லாவிடில் இல்லை தான். அவரை அடைவது யாருக்குத்தான் சாத்தியமாகும்? ஒரு மனிதனல் சாதனை எவ்வளவு நேரம் செய்துவிட முடியும்? இரண்டு மணி நேரம் செய்யலாம், நான்குமணி நேரம் செய்யலாம், அதிகமானல் எட்டு மணி நேரம் செய்யலாம். அவ்வளவு தான். அத்துடன் சாதனையில் மனம் பிரவிருத்திப்பதும் கூட இறைவனுடைய திருவுள்ளப்படி தான் ஏற்படும். அவர் எல்லா சக்திகளுக்கும் உறைவிடமானவர். அவர் தயை செய்யாவிடில், அவர் சக்தியை அளிக்காவிடில், நாம் எவ்வாறு சாதனை செய்வது கூடும்? ஆதலால் தான் நான் கூறுகின்றேன்—இறைவனிடம் சரணடைந்து கிடப்பீராக என்று. உள்ளங் கசிந்து இவ்வாறு பிரார்த்தனை செய்வீராக: "பிரபுவே கிருபை செய்யும், கிருபை செய்யும்" என்று. அப்பொழுது தான் அவர் கிருபை புரிவார். 'வேண்டியதெல்லாம் கிருபை, கிருபை, கிருபை ஒன்றேதான். இராமகிருஷ்ணர் கூறுவார்: "நீ, உனது என்று (இறைவனைக் குறிப்பிட்டுக்) கூறவேண்டும். நான், எனது என்று கூறக்கூடாது" என்று. இறைவனுக தயைகாட்டித் தம்மைக் காட்டியருளினலன்றி நாம் செய்யக்கூடியது என்ன உண்டு? தயை, தயை ஒன்றே நாம் வேண்டுவதெல்லாம். இறைவா! தயை புரிந்தருளுவீராக!

துறவி: மகாராஜ்! பிரார்த்தனையும் கூட என்னல் செய்ய முடியவில்லை. மனம் சஞ்சல முற்றுள்ளது. மனத்தை ஸ்திரமாக நிறுத்துவது—எனக்கு எல்லாச் சமயங்களிலும் முடிவதில்லை.

மகாபுருஷர்: இல்லை, இல்லை. பிரார்த்தனை செய்தேயாக வேண்டும். மிகுந்த வியாகுலத்துடன் பிரார்த்திக்க வேண்டும். மனத்தைச் சோர்வுற விடவேண்டாம். துயருறவும் வேண்டாம். ஆனந்தமாக இருந்து பிரார்த்தனை புரிவீராக. இறைவன் எல்லாம் தருவார் அன்பரே! எல்லாம் தருவார். அவர் உமக்குத் தராதது ஒன்றுமே இராது. பக்தி தருவார், நம்பிக்கையைத் தருவார், தியாகம், தூய்மை, விவேகம், வைராக்கியம், எல்லாவற்றையும் இறைவன் உமக்குத்தருவார். அவரிடம் உள்ளது எதுவோ அஃதெல்லாவற்றையும் உமக்கு அளிப்பார். உமக்குஇவற்றையெல்லாம் அளிக்கும் பொருட்டே அவர் மனித உருக்கொண்டு தோன்றியுள்ளார். அதன் பொருட்டே அவர் உம்மை இங்கு வந்தடையுமாறு செய்து, உமக்குப் புகலிடம் தந்துள்ளார். அவரது சங்கத்தில் உம்மைச் சேர்ப்பித்துக் கொண்டுள்ளார். நீர் தாமாக இங்கு வந்து சேர்ந்து விட்டதாக எண்ணி விடவேண்டாம். ஒரு பொழுதும் அவ்வாறு இல்லவே இல்லை! அத்தகைய எண்ணத்திற்கு மனத்தில் ஒரு தடவையேனும் இடமளிக்க வேண்டாம். கிருபை புரிந்து குருதேவர் உங்கள் யாவரையும் இங்கு அழைத்துக் கொண்டுள்ளார். அவர் அஹேதுக கிருபா சிந்து ஆவார் (காரணமேது மின்றியே கிருபை காட்டும் கடல்). அன்பரே, அவரிடம் சரணடைவீராக. உமக்கு எல்லாம் கிட்டும். காலாகாலத்தில் எல்லாம் கிட்டுவது திண்ணம். உமக்கு எல்லாம் கிட்டும் என்று நான் உறுதி கூறுகிறேன். பக்தியும் விச்வாசமும் உம்மிடம் நிறைந்திருக்குமாறு அவர் செய்வார்.

இவ்வாறு கூறி, மகாபுருஷர் கீதமொன்றைப் பாடினர்.

"மனமே உன்னில் நீ நிலைத்திரு. அங்குமிங்கும் அலைவது ஏனே? உனது உள்ளத்தையே நீ சோதித்துப் பார். நீர் விரும்புவதையெல்லாம் அங்கு நீ பெறுவாய்" "நீர் குருதேவருடைய ஆசிரயத்தை அடைந்தவர். உமக்குப்பயமேனே?" என்று கூறினர்.

விவேகானந்த வைபவம்

2. ஞானவள்ளல்

பௌதிக உலகில் இயற்கையின் பெருஞ் சக்திகள் பணியாற்றுவதைக் காண்கின்ரேம். மடிப்பு மலைகளை உறுதி பெறச் செய்யும் பூகம்ப அதிர்ச்சிகளும், வலிவிழந்த பழையவற்றை உதிர்ந்து விடுமாறு செய்து, வலிவு கொண்டவற்றை நிலைபெறச் செய்யும் புயல்களும், ஓரிடத்தில் இடித்தும் தகர்த்தும் பெயர்த்தும் வேறிடத்தில் வளத்தை உண்டு பண்ணும் வண்டலைத் தந்தும் புதிய செழிப்பை யாக்கும் வெள்ளப் பெருக்குகளும் நமக்குத் திகைப்பைத் தருகின்றன.

பௌதிக உலகில் நிகழ்வதைப் போலவே சிந்தனையுலகிலும் பெரும் சக்திகளின் விளையாட்டைப் பார்க்கின்ரேம். அவ்வப்பொழுது ஜகத்தில் ஜனிக்கும் மகாபுருஷர்கள் பரத்தினின்று நம்மை ஆக்க வருகின்ற பேரியக்கங்கள் போன்றவர்களே யாவர். மகா புருஷர்களுடைய வாழ்க்கை இருபகுதிகளைக் கொண்டதாக அமைகின்றது. ஒன்று, அவர்களுடைய தனி ஜீவிதம் மலர்ந்து விரிந்து பரிபூரண வளர்ச்சியை யடைவது. இன்னென்று சமூகத்தைத் திருத்தி யமைக்கும் வகையில் அவர்களுடைய ஜீவிதம்

லோக சிட்சைக்காகவும் லோக ஹிதத்திற் கேற்றதாகவும் அமைவது. இவ்விரு அமைப்புகளையும் ஆராய ஆராய, அவற்றில் உள்ள ரஸங்கள் நமக்குப் புலனாகும்.

சமூகம் என்பது பல தனி நபர்களால் ஆன ஒரு தொகுதியே யானாலும், உடல் ஒன்றின் அங்கங்கள் எவ்வாறு தலையின் ஆதிக்கத்திற்கு ஏற்ப இயங்குகின்றனவோ, அவ்வாறே சமூகமானது மகா புருஷருடைய ஜீவிதத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளுகின்றது. ஆதலால் சமூக சரித்திரம் பற்பல சந்தர்ப்பங்களில் ஒரு தலைவருடைய ஜீவிய வரலாறு என்பதினுள் ஒடுங்கி விடுகின்றது. பாரத சமூகம் முழுவதும் கால் நூற்றாண்டு காலம் சுதந்திரத்திற்காகச் செய்த பெரு முயற்சியின் வரலாறு எல்லாம் மகாத்மா காந்தி என்ற ஒருவருடைய சரித்திரத்தினுள் அடங்கி விடுகின்றதல்லவா? அம்மாதிரி.

சில சமயங்களில், இவ்வாறு சமூக வாழ்வின் ஜீவநாடியாக உள்ள மகா புருஷரின் அருமை பெருமைகளை அவருடைய சம காலத்தவர் அறிந்து கொள்ளாது போவதுண்டு. அவரை விடத் தம்மையே அதிக மேதாவிகளாகவும் பெரிய தீர்க்கதரிசிகளாகவும் எண்ணிக் கொண்டு அந்த மகா புருஷரை ஏசுவதும் மறுத்துரைப்பதும் ஒறுப்பதும் கூட உண்டு. விளக்கைச் சுற்றியுள்ள ஒரு சிறு வட்டம் இருளாகவே இருப்பதை நாம் காண்கின்றோமல்லவா? விளக்கிலிருந்து வெகு தூரத்தில் உள்ளவர்களோ அதன் ஒளியைப் பெற்று இன்புறுகின்றனர். மேலும் பெருஞ்சோதியை இருளெனவே காணும் மயக்க வியல்பு கண்களுக்கு உண்டு. ஆனால் பிறர் யாது நினைக்கினும் யாது செய்யினும் மகாபுருஷர் மகாபுருஷர்தான்.

கலாசாலைகளில் போதிக்கப்படும் சரித்திரம் ஒரு சார்பானது என்ற குற்றத்திற்கு உட்படுகின்றது. அலெக்ஸாண்டர், ஸீஸர், நெப்போலியன், ஹிட்லர் போன்ற வீரர்களுடைய வரலாற்றைச் சரித்திராசிரியர்கள் விரிவாக எடுத்துரைக்கின்றனர். இவர்கள் ஓரளவுக்கு மக்களின் வாழ்வை இயக்கியவர்கள் என்பது உண்மைதான். ஆனால் மக்களுடைய எண்ணப் போக்கையும் பண்பையுமே அடிப்படையான துறைகளில் மாற்றியமைக்கும் பெருந்தலைவர்களான கிருஷ்ணர், புத்தர், ஏசு, முகம்மது, சங்கரர் போன்றவர்கள் சரித்திரத்தில் போதிய அளவு இடம் பெறுது போகின்றனர். வீரனுடைய செய்கைகள் நம்மை பிரமிக்கச் செய்கின்றன. ஆனால் அச் செய்கைகளுக்கெல்லாம் அஸ்திவாரமாக விருக்கும் சிந்தனையாளரை, கருத்துத் தருவோரை நாம் மறந்து விடுகின்றோம்; மதிப்புத் தராது புறக்கணிக்கின்றோம். சிறு வயதிலேயே இராமன் வனம் சென்று செயற் கரியன சாதித்தான். அவனுடைய அஸ்திரங்கள் ஆற்றிய அரும் செய்கைகளைப் போற்றும் பொழுது அவ் அஸ்திரங்களை அவனுக்கு அளித்த தபஸ்வியான விசுவாமித்திரரை நாம் மறத்தல் தகாது. குருக்ஷேத்திரத்தில் போர் செய்த காண்டீப அதிபனை பார்த்தனின் வீரத்தை மெச்சும் பொழுது, கீதாசாரியரான பார்த்தசாரதி அவனுக்குத் தந்த தத்துவோபதேசத்தை நாம் கருத்திற் கொள்ளாது விட்டுவிடக் கூடாது.

பாமரமக்கள், செய்கையையே பெரிதும் பாராட்டுவர். அறிஞர்களோ செய்கைக்குப் பின் இருந்து அதை உருவாக்குகின்ற சிந்தனையையே பாராட்டுவர். பண்டை நாட்களில் அரசாங்கத்தின் அதிபனை மன்னனுக்குப் புத்தி கூறுவதற்கு புரோஹிதர் என்ற மேதாவி ஒருவர் இருப்பது வழக்கம். செய்கை புரிபவன் மன்னனேயானாலும் அவனுக்கு எண்ணத்தையும் கருத்தையும் புரோஹிதரே அளித்து வருவார். மௌரிய சந்திரகுப்தனுடைய ஆட்சியின் பெருமையெல்லாம் சாணக்கியர் என்ற அறிஞருடைய உதவியால் தானே சாத்தியமாயிற்று? அசோகருடைய அழியாப்புகழுக்குக் காரணமாய் இருப்பது அவர் செய்த போர்கள் அல்லவே, போரில் அவர் வெறுப்புக் கொள்ளுமாறு செய்தவை அவரது ஆழ்ந்த சிந்தனையும் அச்சிந்தனையை ஊட்டி வளர்த்த பௌத்த பிக்ஷுக்களின் அறவுபதேசமும் தானே. குப்தர்கள் காலம் பொற் காலமெனப் போற்றப் படுவதற்குக் காரணம் சமுத்திரகுப்தரின் திக்விஜயமும் விக்கிரமாதித்தனுடைய இராணுவ வெற்றிகளும் மட்டும் அல்லவே, நவரத்தினங்கள் என்ற கலைஞர்கள் அவர்கள் காலத்தில் செழித்திருந்தது தானே.

பௌதிகப் பொருள்களுக்குச் சக்தி உண்டு என்பது உண்மைதான்; ஆனால் எண்ணமோ சர்வ சக்தி வாய்ந்தது. புத்தர் பிரான் என்றோ எண்ணிய எண்ணங்கள் எத்தனை நூற்றாண்டு காலமாக எத்தனை கோடி மக்களை உருக்கி வந்துள்ளன! அம் மகான் உருட்டிவிட்ட அறவாழியின் போக்குக்குத் தடையேது, முடிவேது? புத்தர் பிரான் கண்ணாலும் காணாத பல புதிய நாடு

களிலெல்லாமன்றே அவ்வாழி சுழன்று சுழன்று சென்று கொண்டிருக்கின்றது!

எனவே மனித சமுதாயத்தைப் படிப் படியாக முன்னேறச் செய்கின்றவர்கள், சிந்தனை வானில் உயர்ந்த நிலைகளில் சஞ்சரித்து வாழும் தபஸ்விகளும் மகரிஷிகளுமே ஆவர்.

மேல்வாரியாகப் பயிலப் படுகின்ற சரித்திரத்தில் விவேகானந்த சுவாமிகள் இடம் பெறுவரோ என்பது சந்தேகம்தான். ஏனெனில் அவர் அரசியல் துறையில் தொடர்பேதும் கொள்ளவில்லை. அதற்கான திறமை அவருக்கு ஏராளமாக இருந்தது. ஆனால் அவருடைய குருவான இராமகிருஷ்ணர் அவருடைய ஆற்றல்கள் அனைத்தையும் மகத்தான லோககைங்கரியம் ஒன்றினில் ஈடு படுத்திவிட்டார். ஞானதானம் என்பதே ஆகும் அக்கைங்கரியம். இப்பெரும்பணியை ஆற்ற விவேகானந்தருக்கு அரசியல் போன்ற சாதாரணத் துறைகளில் எவ்வாறு மனம் கொள்ளும்? பேராழியில் சங்கமம் ஆக வேண்டி ஓடுகின்ற நதியொன்று குட்டையிலும் குளத்திலும் விழுந்து திருப்தியுற்று நின்று விடுமா?

சென்னை அன்பரான அளசிங்கப் பெருமாள் என்பவருக்கு மேனாட்டினின்று வரைந்த கடிதமொன்றில் விவேகானந்த சுவாமிகள் "அரசியல் வாதம் எதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. எனக்கு சர்வேசுவரனும் சத்தியமுமே உலகின் கண்ணுள்ள ஒரே அரசியல் வாதமெல்லாமும் ஆகும். இவற்றிற் கன்னியமான மற்றெல்லாம் வெறும் குப்பையேயாகும்" என்று தெரிவித்தார்.

அரசியல் வாதிகளும் அரசாங்கத் தலைவர்களுமே தேச சரித்திரத்தை ஆக்குகின்றவர்கள் என்ற கருத்துக் கொண்டவர்கள் பாரத சமுதாய சரித்திரத்தில் விவேகானந்தருக்கு என்ன பங்கு உண்டு என்று எண்ணலாம். உண்மை என்னவெனில், நவீனபாரதமே விவேகானந்தருடைய சிருஷ்டி என்றால் அது மிகையாகாது. சமுதாய மொன்றின் போக்கினில் புதியதொரு சகாப்தத்தை உண்டு பண்ணுகின்றவன் வெளியலங்காரமாகச் சில பூச்சுவேலைகளைச் செய்வதுடன் நின்றுவிட மாட்டான் சமூகத்தின் வேர்களுக்கு அவன் நீர் பாய்ச்சுவான். இதைத்தான் விவேகானந்தர் செய்தார்.

சோர்ந்து போயிருந்த பாரதத்தை அவருடைய சங்கநாதம் தட்டியெழுப்பிற்று. தனது பண்பையே மறந்து போயிருந்த நமது சமூகத்திற்கு அவர் சுயவுணர்வைத் தந்தார். எவ்வழிச் செல்வது என்று தெரியாது திகைத்த இந்திய மக்களுக்கு அவர் மார்க்க தர்சி ஆனார்.

ஆனால் அவருடைய திருப்பணி பாரத நாட்டுக்கு உழைப்பதுடன் நின்றுவிடவில்லை. கடல் கடந்த கங்கையென அவர் மேனாடுகளுக்கும் சென்றார். மேனாட்டு உலகின் சிந்தனையாளருக்குப் புதியதொரு நோக்கும் புதிய மனப்பான்மையும் தரவல்ல நூதனக் கருத்துக்களை அவர் வெளிப்படுத்தினர். மேனாட்டு மேடையில் நின்று அவர் உரைத்த முதற் சொற்களான "அமெரிக்க நாட்டுச் சகோதரி சகோதரர்களே" என்பவையே, மனித சமூகம் பல வேறுபாடுகளுக்கிடையில் ஒரே குடும்பமே யாகும் என்பதை அறிவுறுத்தின. மனிதன் பாபத்தில் பிறந்து பாபத்தில் வளர்கின்றவன் அல்ல, அவன் அமிருதமயமானவன், தெய்வ சத்து உடையவன், என்று அவர் எடுத்துக் காட்டிய வேதாந்த உண்மை அறிஞர்களுக்குப் புதிய நம்பிக்கையையும் பலத்தையும் ஊட்டிற்று. வாழ்க்கையின் எந்தப் பணியையும் புனித யக்ஞமாக இயற்றலாம், கர்மயோகரதின் மூலம் உயர் நிலையை யடையலாம் என்று அவர் விளக்கிக் கூறியதும், ஜீவன் சிவனன்றி வேறல்ல, ஜீவசேவை சிவ பூஜையாக ஆற்றப்பட வேண்டுமென்று அவர் போதித்ததும், உலக வாழ்வின் தத்துவத்தை அறிந்து உய்வதற்கு மக்களுக்கு ஒரு புதிய வழி திறந்து வைத்தன போல் உதவின.

எனவே அரசியல் அரங்க மேடையில் தோன்றுவதின் மூலம் சரித்திரத்தில் இடம் பெறும் தலைவர்கள் போலவன்றி, மக்களது உள்ளத்தில் உயர் கருத்துக்களைப் பாய்ச்சிக் கனியச் செய்யும் ஆத்மீகத் தலைவருள் ஒருவரானர் விவேகானந்த சுவாமிகள். அவருடைய மானஸிகச் செல்வத்துக்கு அவர் நாட்டினரான நாமும் பிறநாட்டினரான மற்றவரும் உரிமையாளர்கள் ஆயினோம்.

* * *

தமது அந்தியகாலம் நெருங்கியதை நன்கு உணர்ந்திருந்த விவேகானந்த சுவாமிகள் ஒரு நாள் "பதினைந்து நூற்றாண்டுகளுக்குப் போதிய காரியத்தை நான் செய்துள்ளேன்" என்று கூறிக் கொண்டாராம். மனித சமூகத்தின் 1500 வருஷத்திய முன்னேற்றத்திற்கான எண்ணம், கருத்து, இலக்ஷியம், சிந்தனை இவற்றை அவர் நமக்குத் தந்து போயுள்ளார்.

* * *

பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு விவேகானந்த சுவாமிகளைப் பற்றிக் கூறிய மொழிகள் மேலே கூறிய கருத்தை நன்கு விளக்குகின்றன;

“இக் காலத்து இளைஞர்களில் எத்தனை பேர் விவேகானந்த சுவாமிகளின் சொற்பொழிவுகளையும் கட்டுரைகளையும் படிக்கின்றனர் என்பதை நான் அறியேன். ஆனால் என் தலைமுறையைச் சேர்ந்த பலர் விவேகானந்த சுவாமிகளால் வெகு ஆழ்ந்த முறையில் வசீகரிக்கப்பட்டு, இயக்கபபட்டனர் என்பதை நான் உங்களுக்குக் கூற முடியும். இத் தலைமுறையைச் சேர்ந்தவர்களுள் விவேகானந்தருடைய பேச்சுக்கள், கட்டுரைகளைப் படித்தார்களானால் அதனால் மிக நலத்தை அடைவார்கள் என நான் கருதுகின்றேன். அவற்றினின்றும் அவர்கள் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவார். இந்தியாவில் பலருடைய உள்ளங்கள் விவேகானந்தரிடம் உறுதியாக வசப்பட்டு இயங்கின. ஆண் பெண் பாலாரான இளைஞர் இரண்டு மூன்று தலைமுறையினர் அவருடைய சக்திக்குட்பட்டு நடந்து கொண்டனர் என்பதில் ஐயமில்லை...அரசியல் வாதி என்று நாம் சாதாரணமாகக் குறிப்பிடுகின்றோமே அத்தகைய அரசியல் வாதி அல்ல விவேகானந்த சுவாமிகள். ஆனாலும் பாரதத்தின் நவீன தேசிய இயக்கம் உள்ளதே அதனுடைய பெரும் ஸ்தாபகர்களுள அவரும் ஒருவர் என நான் நம்புகிறேன். பிற்காலத்தில் அந்தத் தேசிய இயக்கததில் ஏதோ ஓர் அளவில் ஆழ்ந்த பங்கு கொண்ட மக்களில் பலர் விவேகானந்த சுவாமிகளிடமிருந்தே தமது ஊக்கச் சக்தியைப் பெற்றனர். நேரடியாகவோ மறைமுகமாகவோ விவேகானந்த சுவாமிகள் நவீன பாரதத்தை ஆழ்ந்த முறையில் இயக்கி வைத்துள்ளார்.”

நிலத்தைப் பண்படுத்தி உணவுப் பொருளை விளைவிக்கும் உழவரை நாம் போற்றுகின்றோம். இயற்கையின் சக்திகளை ஆராய்ந்து மனித வாழ்வுக்குப் புதிய வசதிகளை ஆக்கித் தரும் விஞ்ஞானிகளைப் பாராட்டுகின்றோம். உணவிலும் வேறு வசதிகளிலும் மட்டுமே திருப்தியுறாது, அறிவுப் பசியும் இலக்ஷிய தாகமும் கொண்டு உழலுகின்ற மனித ஜாதியினருக்கு ஞானாமிர்தத்தைப் பரிபாறுகின்ற ஞான வள்ளல்களின் கொடையை நாம் பன்மடங்கு அதிகமாகவன்றோ போற்ற வேண்டும்!

நமது சிகர ஜோதி

வழிபடுதல், வழிப்படுதல், வழிப்படுத்தல்

உலகத்தை உய்விக்க வந்த ஒரு பெரியாரது பிறந்த நாளைக் கொண்டாடும் போதும், அவரது வாழ்க்கையின் பெருமையைச் சிந்திக்கும் போதும் நாம் பேராச்சரியத்தில் மூழ்குகிறோம்; அப்பெருமையை ஒப்புக் கொள்கிறோம், அதன்மீதுள்ள ஈடுபாட்டால் அவரை வழிபடுகிறோம். ஆனால் ஆண்டுக்கொரு நாள் அவ்வாறு செய்வோமெனினும் மற்றைய நாள்களில் அவரைப் பற்றிய நினைவு நம்மிடம் எழுவதில்லை, அவரது பெருமைக்கும் நமது தினசரி வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தத்தைச் கருதுவதுமில்லை. அவர் பிறந்ததும், வாழ்ந்ததும் அரும்பெரும் பணிகளை நமது நாட்டிற்கும் பிற உலகப் பகுதிகட்கும் இயற்றியதும் நமக்காக வல்லவோ என்பதை நாம்அவ்வளவு உணருவதில்லை. நாம் ஒவ்வொருவரும் அவரைப்போன்ற பெருமையை எய்தும் கடப்பாடுடையோம், வல்லமையுமுடையோம் என்பதையும், அம்மட்டோ! பிறரையும் அத்தகைய பெருமையெய்தும்படித் தூண்டும் பணியில் ஈடுபடல் வேண்டும் என்பதையும் சிந்தியாதொழிகிறோம். இதனாலே அவரது விழுமிய தன்னயமற்ற வாழ்வின் பண்பும் பயனும் நமக்குக் கிட்டாது போகின்றன. தற்கால இந்தியாவின் வாழ்வு முழுவதும் குறளுருவிலே அவரது உள்ளத்தைச் சூழ்ந்து, அதைத் தகைவதாயிற்று. அச்சூழ்நிலைக்கு இடையே அவரது தூய வலிமையார்ந்த தெய்விக உள்ளம் தனது இயல்பை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று. இந்தியரது வாழ்வில் அமைந்துள்ள குணங்களும் குற்றங்களும், இயல்புகளும், ஆசைகளும், சங்கடங்களும், சக்திகளும் ஒன்றாயிணைந்து, குறுகிச் செறிந்து அவரது மனோமய கோசமாயின. அவரது தூய அகஇயல்பும் இம் மனோமயச் சூழ்நிலையும் ஒன்றையொன்று தாக்கி வெல்ல முயன்று வந்தன; இறுதியில்

அவரது அக இயல்புக்கு ஏற்றவாறு அச்சூழ்நிலை மாறியமைந்து, அதனை முற்றிலும் எதிர்ப்பின்றி வெளிப்படுத்துதற்கு ஏற்ற கருவியாயிற்று. அவரது உள்ள அரங்கினில் நிகழ்ந்த இப்போரும் வெற்றியுமே உலக அரங்கினில் பலரறிய நடந்த பெருவாழ்வாக வடிவு கொண்டன. தற்கால இந்தியாவின் முற்கால வாழ்வும் பிற்கால வாழ்வும் அவரது வாழ்விலே காணப்படுவதாகும். அதனை இந்தியர் முற்றக் கற்றுச் சிந்தித்து, வருங்கால இந்தியா முற்கால இயல்பையும் தற்காலச் சூழ்நிலையையும் புறக்கணியாது, முன்னது தடையற வெளிவருதற்கேற்ற நிலையிற் பின்னதை அமைக்க முயலும் வழி இன்னது என்பதைத் தெரிந்து கொள்ளுவராயின், இந்திய நாடும் எதிர்காலத்து அவரெய்திய அளப்பரும் பெருமையை எய்திப் பிறங்கும் என்பதில் ஐயமில்லை. இந்திய ஸமூக வாழ்க்கையிலே பலப்பல துறைகளிலே நாம் படும் அல்லல்களும் உணரும் உணர்ச்சிகளும் முழுவேகத்தோடும் கூர்மையோடும் அவரது உள்ளத்தே தோன்றி, அவரது உள்ளத்துச் சிந்தனைக்கு இலக்காகி, அவரது உள்ளத்திலே ஓய்வும் முடிவும் பெற்றன. இந்திய ஜனஸமூக வாழ்க்கையெனும் மரத்திற்கு சுவாமி விவேகாநந்தர் கொழுந்தேபோன்று ஒளிர்கின்றார். எவ்வாறெனின், மரத்திற்குத் தண்ணீர்த் தட்டு உண்டாகும் போது கொழுந்தே அதனை முதலில் உணர்ந்து தான் வாடும். அதுபோன்று இந்திய ஜனஸமூக வாழ்க்கைக்கு நேர இருந்த துயரத்தையெல்லாம் அவரே முதன் முதலில் தாமே ஏற்று வாடி வருந்தி, அத்துயரத்தை ஒழித்தற்காக ஓடியுழன்று, இறுதியில் நாட்டை உயர்நிலைக்குக் கொணரும் நல்ல நெறியை நாடிக் கண்டு கூறினர். நம் நாட்டுக்குத் தொண்டு செய்ய முன்வருபவர் நமது மக்களின் துயரநிலைக்காக அல்லும் பகலும் உள்ளங் கரைந்து கண்ணீர் மல்கி அமைதியுற்றுத் துடிக்க வேண்டும்; பின்னர் அம்மக்களின் அல்லலை நீக்கும் வழியைப் பலவாற்றானும் ஆராய்ந்து கண்டறிய வேண்டும்; அதன்பின் தொண்டு செய்ய முன் வருங்கால், தன்னயத்தை அறவே ஒழித்துப் பிறர்க்கெனவே வாழும் பெருந்தகைமையைப் பெறவேண்டும், என்பர் ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர். அவர் கூறிய மூன்று இலக்கணங்கட்கும் இலக்கியமாய் இலங்கியவர் அவரனைய வேறொருவர் இருந்தனரா என்பதைச் சிந்திக்க வேண்டும். அவரது அளத்தற்கரிய பெருமையினைக் கேள்வியுற்றதும் அறிந்ததும், அவரை வழிபடுவது இயல்பே. அது போதாது, அவர் சென்ற வழியே நாமும் சொன்று, அவரை நேருக்கு நேராக அவரது உபதேசங்கள் வாயிலாகக் கண்டறிய வேண்டும், இது வழிப்படுதலாகும். இதுவும் போதாது; நம்மையும் பிறரையும வழிப்படுத்தல் வேண்டும்; அவர் பற்றிய நெறியிலே செல்லுமாறு நம்மைச் சீர்ப்படுத்திப் பிறரையும் அதிற் செலுத்தல் வேண்டும். இக்கடமைகளை நாம் அறிந்து இயற்றும்போதே, நாம் அவரது வாழ்க்கையின் முழுப் பயனையும் பெற்றவராவோம்.

நமது சமூகவாழ்க்கையின் இன்னல்களை வேரறுக்கும் ஒரே வழியை சுவாமி விவேகாநந்தர் தமது வாழ்வில் நிலை நாட்டியுள்ளனராயின், நம்மவரிற் கற்றோரும் அவ்வழியினை அறிவதிற் போதிய ஆர்வமும் ஊக்கமும் அற்றவராதல் என்னை? நம்மவரை ஆட்கொள்ளவே அவர் தோன்றினர் என்பதையும், அவர் காட்டிய வழியே நமது இயல்பிற்கும் தற்காலத்தின் போக்குக்கும் வருங்காலப் பெருமைக்கும் மிக மிக ஏற்றதாகும் என்பதையும் எல்லோரும் ஒப்புக் கொள்ளாது போதல் இயல்பே; ஆனால் இவ்வழி இன்னதென்பதைக் காய்தல் உவத்தலின்றி (வெறுப்பு விருப்புகளின்றிக்) கற்று ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருதல் இவ்வழியிலே சிந்தனையைச் செலுத்தும் அறிவாளரின் கடமை யன்றோ? சமூகத் தலைவராக முன்வருவார் எந்நெறியில் உய்க்கின்றனரோ அந்நெறியிலே இளைஞர் ஊக்கத்தோடும் முழுமனதோடும் முன் செல்வர்; இளைஞரது மனங்களை உருவாக்குவோராகிய அன்னார்க்கு இவ்வகையிலே பெரும் பொறுப்பு உள்ளதை அவர்கள் மறவாதிருத்தலும் வேண்டும். நமது நாட்டு அறிவாளரும் பொறுப்பை உணர்ந்திருந்தும், சுவாமி விவோநந்தர் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக எடுத்தோதிய நன்முறைகளை அறியவும் கருதாது போன காரணம் யாது? நமது ஸமூக வாழ்க்கைக்குரிய பிரச்சினைகளின் இயல்பை இன்னும் அவர்கள் நன்குணராமையே. ஏனைய நாட்டு மக்களின் வாழ்க்கையில் எழும் பிரச்சினைகளைப் போன்றவையே அவை யென்றும், அந்நாடுகளின் முன்னேற்றத்திற்குத் துணையாயிருந்த நெறிகளைக் கண்டறிந்த அரசியல் நிபுணர்களின் முடிபுகளே முக்கியமான அம்சங்களில் நமக்கும் பொருந்துவன வாகும் என்றும், ஆராயாமலே அவர்கள் நம்பிவிடுகின்றனர். மேலும், ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர் வேதாந்தத்திலே (ஜகத்குரு) உலக குரவராக விளங்கும் பெருமை பெற்றனரெனினும், துறவியாதலின், பொருளாதாரத் துறையிலும் அரசி

யல் போன்ற ஏனைய இலௌகிக ஸமூக வாழ்வுத்துறைகளிலும் நம்மவர்க்கு ஏற்படும் இடையூறுகளையும் தேவையையும் முட்டுப்பாடுகளையும் உள்ளவாறு ஓர்ந்து, அவற்றைத் தீர்க்கும் வழிகளைக் காணும் திறமையுள்ளனரோ என்ற ஐயத்திற்கும் ஆளாகின்றனர். சுருங்கச் சொல்லின், மேற்றிசை நாகரிகத்தின் ஆவேசத்தினால் அவர்கள் வாழ்க்கையை உலகியல் வாழ்க்கை ஞான வாழ்க்கையென இரு பிளவாக்குகின்றனர்; இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டனவாதலின், உலகியல் வாழ்க்கைக்குரிய நலனை ஞானச் செல்வர்வசம் ஒப்புவிப்பது ஆபத்தாகும் என்று அஞ்சுகின்றனர்; நமது ஸமூக வாழ்க்கையின் இலக்ஷியங்களை உலகியற் சார்புடையனவாகக் கருதி ஞானவீரர்களை ஸமூக வாழ்க்கைத் துறையினின்றும் ஒதுக்கி வைக்கின்றனர்.

இத்தகைய கேட்டுக்கெல்லாம் மூலம், அரசியல் வாழ்வே ஸமூகவாழ்வின் அடிப்படை என்ற நினைவுதான். மேற்றிசையாரது நவ நாகரிகச் சுழற் காற்று நமது நாட்டில் வீசிய காலமுதலே மேற்றிசைக் கல்வியைப் பருகிய நம் மக்களின் உள்ளங்களிலே ஒரு தவறான கருத்து குடிகொள்ளலாயிற்று. அது யாதெனில், ஸமூக வாழ்வின் பெருமையையோ திறமையையோ நலனையோ அளவிட்டறிய உரைகல்லாவது, அந்த ஸமூகத்தின் அரசியல் வாழ்வே, அதாவது தேசீய வாழ்வே என்பது. மேலை நாடுகளில் இது ஒருவாறு உண்மையாகலாம்; நமது நாடு அமைந்த முறையும், வளர்ந்த முறையும், வாழ்ந்த முறையும் வேறுவிதமாதலின், அவ்வுண்மை நமக்குப் பொருந்தாது. ஞான வாழ்வே நமது ஸமூக (தேசீய) வாழ்வின் உயர்ந்த சிகரம், ஏனைய துறைகளில் நாம் நடத்தும் வாழ்வெல்லாம் அதற்கு ஆதாரமாகும். நிலையிலே அமைய வேண்டும் என்பது நமது கருத்தாயிற்று. நம் ஸமூக வாழ்விற்கு வித்தும் உயிரும் உரமும் நமது ஞான முயற்சியொன்றே என்பது நமது கொள்கை. இக்கொள்கையைப் பின்பற்றி நமது நாடு வாழ்ந்துவந்த காலம்வரை அது எல்லாத் துறைகளிலும் சீரும் சிறப்பும் எய்திச் செழிப்புற்றிருந்தது; நமது ஸமூக வாழ்க்கையெனும் மரமெங்கும் ஓடிப் பாய்ந்துகொண்டிருந்த ஞானப் புனல் வற்றவே அதன் கிளைகள் பலவும் வாடி வதங்கலாயின. உண்மை இதுவாயினும், இதனைக் கூர்ந்து நோக்கியறியும் நுண்மதியிலாதார் நமது ஞான வாழ்வைப் பழிக்கவும், பர வாழ்வைப் பெரிதெனக் கருதியதன் பயனாகவே இக வாழ்விற் கேடுபுகுந்ததெனச் சாதிக்கவும் துணிகின்றனர். அம்மட்டோ! ஆங்கிலக் கல்வியைப் பெற்றோர் பலர் சுவாமி விவேகாநந்தரது நெஞ்சத்திலே பொங்கிய தேச பக்தியையும், தேச மக்களின் மீது அவருக்கிருந்த பெருங்கருணையையும், தேசப் பணி செய்யும் அவசியத்தையும் மெச்சி வற்புறுத்துகின்றாரெனினும், அத்தேசபக்தி தேசப் பணி இரண்டின் இயல்புகளையும் அவர் இன்னவாறு உணர்ந்து, அப்பக்தியால் பணி இயற்றும் முறை இன்னதென வரையறுத்துக் கூறினாரென்பதை அறிவதில் ஆவலற்றவராகின்றனர். தமது தேசாபிமானத்தை அவரது தேச பக்தியாகவும், தாம் தேசத்திற்கு நன்மையெனக் கருதுவதை அவர் கருதிய தேசத் தொண்டாகவும் கொள்ளும் மருளுக்கு ஆளாகின்றனர். அவரது மருள் தீர்ந்த மாசறு காட்சிக்குப் பதிலாகத் தமது இருள் சேர்ந்த பற்றுள்ளத்தின் காட்சியை அமைத்துக் கொள்கின்றனர். ஞான வெற்றி முரசு முழங்க அவர் பாரத நாடு முழுதும் கொழும்பிலிருந்து இமய மலை வரை வேதாந்த கேசரி போன்று கர்ச்சனை செய்து வழங்கிய நல்லுபதேசங்களை நம்மவரிற் பலர் கற்பதுமில்லை, ஆராய்வதுமில்லை, சிந்திப்பதுமில்லை; கற்பினும் தாம் மேலை நாட்டினரிடமிருந்து பெற்று அணிந்து கொண்டுள்ள அரசியற் கண்ணாடி வழியாக நோக்கி அந்த அரசியல் வண்ணத்தை அவரது போதனைக்கும் தீட்டி விடுகின்றனர். அவர் கூறிய பலவகையான போதனைகளும் ஞானவேரினின்றும் முளைத்த பல கிளைகளேயாம்: அக்கிளைகளிற் சிலவற்றை வெட்டி வேறொரு மரத்தின் கிளைகளோடு ஒட்டவைப்பதனால், அவை ஒட்டா: ஒட்டினும் தமது இயல்பை இழந்து விடுவது திண்ணம். இந்திய ஸமூக வாழ்க்கை மரத்திற்கு வேராவது ஞானமே; ஏனைய மேலை நாட்டு ஸமூக வாழ்க்கை மரங்கட்கு வேராவன, அரசியலும் பொருளாதார இயலும் அறிவின் சுதந்திரமும் பிறவும். இந்த அடிப்படை வேறுபாட்டை உணராதாரும் ஒப்புக்கொள்ளாதாரும், நமது நாட்டிற்கு இன்று செய்தற்குரிய பணி இன்னதென சுவாமி விவேகாநந்தர் தெள்ளத் தெளிய உரைத்ததை ஒழுங்காக முற்றும் அறிய இயலாதவரேயாவர்.

ஸ்ரீ சுவாமி விவேகாநந்தரது பிறந்த நாளையொட்டி இந்திய மக்கட்கும் (அவர்கள் வாயிலாக ஏனைய நாட்டு மக்கட்கும்) அவர் போதித்த அரும்பெரும் ஞானக் கருத்துக்கள் மூன்றை, அறிந்து கொள்ளுதல் நமது தனி வாழ்க்கையையும் ஸமூக வாழ்க்கையைய்

யும் பெருநலம் பயப்பதாகும். பலவகையான வேறுபாடுகட்குள்ளே ஊடுருவி நோக்கி அவற்றிற்கு அடிப்படையாயுள்ள ஒற்றுமையைத் தமது கூரிய ஞான நோக்கினால் கண்டறிந்து, அதனை வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொணரும் வகையைக் கூறியதே அவரது தனிச்சிறப்பாகும். எல்லா மதங்களிலும், மனிதன் (ஆன்மா) கடவுள் (ஈசன்) உலகம் (அறிவற்ற பொருள்) எனும் மூன்று தத்துவங்களையும் (முப்பொருள்களையும்) பற்றிய பேச்சும் ஆராய்ச்சியும் உண்டு; ஆனால் ஒவ்வொன்றின் இயல்பையும், ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தத்தையும் பற்றிய முடிபுகள் பலவாறாக வேறுபட்டுக் கிடக்கின்றன; இதனால் மதங்கட்கிடையே வாதப் போர்களும் சமயப் போர்களும் மல்கி வருகின்றன. இவற்றை ஒழித்து ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் ஊட்டுதற்காக, அவர் மதக் கருத்துகளின் ஸாரத்தைக் கடைந்தெடுத்துப் புகட்டுகிறார். அவர் கூறுவதாவது: "நம்மிடையே வெளிப் பார்வைக்கு ஒன்றோடொன்று முரண்பட்டனவாயும் எதிர் வழக்குத் தொடுப்பனவாயும் தோன்றும் பல சமய சித்தாந்தங்கள் உள்ளன; ஆனால் அவையனைத்தின் வழியாகவும் செல்லும் பொதுக் கொள்கை ஒன்று உண்டு. அது யாதெனில், எல்லா மேன்மையும் ஆற்றலும் தூய்மையும் முன்னமே ஆன்மாவின்கண் புதைந்து கிடைக்கின்றன என்பதே. இராமாநுஜரின் கொள்கைப்படி, ஆன்மா சில காலங்களில் சங்கோச விகாசங்களை (சுருக்கத்தையும் பெருக்கத்தையும்) அடைகிறது: சங்கரரது கொள்கைப்படி அது மயக்கத்திற்கு உள்ளாகிறது—இவ்வளவே. இவ்வேறுபாடுகளைப் பொருட்படுத்த வேண்டாம். சக்தி அங்கே குவிந்திருக்கும் உண்மையை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்-அது உள்ளொடுங்கியோ வெளிப்படுவதாகவோ இருப்பினும், அது அங்கே உள்ளதே; இதை நம்பும் விரைவிற்கு நமது நலனும் பெருகுகின்றது. எல்லா ஆற்றலும் உனக்குள்ளே இருக்கின்றது; நீ எதையும் செய்ய இயலும், எல்லாவற்றையும் செய்ய உனக்கு இயலும். இதை நம்புமின்; பலவீனமாயிருப்பதாக நம்பாதீர்; நம்மிற் பெரும்பாலார் இந்நாளிற் செய்து வருவதுபோல உங்களை அரைப்பங்கு அறிவிழந்த பித்தரென நம்பாதீர். வேறெவருடைய வழித்துணையும் இன்றியே நீங்கள் எல்லாம் செய்ய வல்லவராவீர். எல்லாச் சக்தியும் உள்ளே இருக்கின்றது. எழுந்து நில்லுங்கள், உங்கட்குள்ளே வீற்றிருக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துங்கள்." மற்றோரிடத்தில் "ஒவ்வோர் ஆன்மாவும் உண்ணிறைந்த தெய்வத் தன்மையுடையது. அகத்தும் புறத்தும் உள்ள இயற்கையை அடக்குவதால், உள்ளடங்கிய இத்தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே இலக்ஷியமாகும். கருமத்தாலோ பூஜையாலோ மன அடக்கத்தாலோ தத்துவ ஞானத்தாலோ—இவைகளில் ஒன்றாலோ பலவற்றாலோ எல்லாவற்றாலுமோ—இதனை இயற்றி, விடுதலை யடைக. இதுவே சமயத்தின் முழுமையும்; கொள்கைகளோ முடிவுகளோ, கிரியைகளோ, நூல்களோ, கோயில்களோ, உருவங்களோ, முக்கியமற்ற விவரங்களேயாம்" என்று உலகங்களிலுள்ள எல்லா மக்கட்கும் போதித்தார். இந்நான்கு மணி வாக்கியங்களிலே சமயத்தின் ஸாரமும் சமய வாழ்வின் ஸாரமும் இன்னின்னவையென்பதைத் தமது அனுபூதிக் கடலினின்றும் தூய அறிவாற் கடைந்தளித்தார். நமது ஆன்மாவிற்கும் பரம்பொருளுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியே பலவகை முடிபுகள் சிறப்பாகச் சமய சித்தாந்தங்களிலே காணப்படுகின்றன. அவையனைத்திற்கும் பொதுவானது ஆன்மாவின் தெய்வத் தன்மையென்பதே. ஆன்மாவும் பரமான்மாவும் வேறுபாடின்றி ஒன்றேயெனினும், ஆன்மாவிற்குள்ளேயோ வெளியிலேயோ பரமான்மா அமைந்து, தனது தன்மையை வெளிப்படுத்துகிறதெனினும், முடிவில் முழுத் தெய்வத் தன்மையும் ஆன்மாவாயிலாக் வெளிவரக் கூடியது என்பதில் வேறுபாடில்லை. ஆதலின் எல்லா ஆன்மாக்களும் தெய்வத்தன்மை வாய்ந்தனவே என்னத் தடையில்லை; ஆக அவையனைத்தும் ஒரே தன்மையன, சமமானவை என்பது பெறப்படுகின்றது. இது ஆன்ம (ஒற்றுமை) ஒருமைக் கருத்து.

இரண்டாவது ஞானக்கருத்தாவது சமய ஒற்றுமையைப் பற்றியது. சமயம் என்பது பரம்பொருளை நேரில் உணர்ந்து, தூய உயர்ந்த இன்பத்தைப் பெற்று உலகக்கட்டுகள் அனைத்தினின்றும் விடுதலை அடைதற்குரிய ஒரு நெறியேயாம். மதக் குரவர்களால் நிலைநாட்டப்பட்ட ஒவ்வொரு பெரும் சமயத்தும் தத்துவபாகமும், புராணபாகமும், கிரியாபாகமும் காணப்படுகின்றன. தத்துவபாகம் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் அடையவேண்டிய அறுதி நிலையையும் அதற்குரிய நெறியையும் விரிவாக எடுத்தியம்பும். புராணபாகம் அசாதாரணமான சமயக்குரவர்களும் சமய அனுபூதி பெற்ற சான்றோர்களும் ஆகிய மகான்களின் வரலாறுகளைப் பற்றிக் கூறும். கிரியாபாகம் வழிபாட்டிற்

கும் தியானத்திற்கும் துணையாகும் சடங்குகளைப்பற்றியும், குறிகளைப்பற்றியும், மலர் தூபம் தீபம் போன்ற ஏனைய துணைப் பொருள்களைப்பற்றியும் கூறும். இம்மூன்று பகுதிகளும் சமயங்கட்குப் பொதுவெனினும் யாதேனும் ஒரு பகுதியையே ஒவ்வொரு சமயமும் பெரிதும் வற்புறுத்தும். அன்றியும் ஒரு சமயத்திற்குரிய மூன்று பகுதிகட்கும் ஏனைய சமயங்கட்குரிய பகுதிகட்கும் பெரும் வேறுபாடுகளும் மாறுபாடுகளும் காணப்படுகின்றன. இவை காரணமாகப் பெரும் சமயப் பூசல்களும் பெருவழக்குகளும் பொதுவாக உலகமெங்கும் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு சமயத்தாரும் தம்மதே மெய்ச்சமயம் என்றும் மற்றவை மெய்க்குப் புறம்பான பொய்ச் சமயங்கள் என்றும் பிடிவாதம் செய்கின்றனர். இந்நிலையிலே சுவாமி விவேகானந்தர் கூறும் சில மேன்மையான கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன. சமயம் என்பது உண்மையில் அனுபூதியே, வாழ்வே, பேச்சன்று, கொள்கைகளை ஒப்புக்கொள்ளலும் மறுத்தலுமன்று, கட்டுகட்கு உட்பட்ட நிலையினின்றும் வெளியேறி முக்தி நிலையையடைவதே. சமயத்தின் மெய்யான இயல்பு இவ்வாறாதலின், ஒவ்வொரு பெருஞ் சமயமும சமயகுரவர்களது அனுபவத்தையும் தூய அறிவையும் ஆதாரமாகக் கொண்டு, பிறவிக் கடலினின்றும் கரையேறி இன்புறும் ஒரு நெறியையே போதிக்கின்றது. மக்களின் பல திறப்பட்ட இயல்புகளுள் யாதேனும் ஒன்றுக்கோ வேறொன்றுக்கோ ஏற்ற நெறியைக் கண்டு போதிக்கின்றது. சுறுசுறுப்போடு பிறர்நலங்கருதி வேலை செய்வதில் விருப்பமுடையார் சிலர். அழகுணர்ச்சியிலும் அன்புணர்ச்சியிலும் ஈடுபடுவார் சிலர், மனத்தின் இயலை யாராய்ந்து இயக்கும் சக்திகளை அறிந்து அடக்கிஆண்டு வசப்படுத்திச் சாந்தி பெறும் அவாவுடையார் சிலர். இன்னும் சிலரோ தமது நுண்ணறிவால் பொறிகட்கும் மனத்திற்கும் புலப்படும் பொருள்களின் இயல்பை ஆராய்ந்து, முடிவாக அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள பொருள் யாது என்பதைக் காண முயல்வர். மக்களின் இயல்புகளில் இந்நான்கு வகைப்பட்ட வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் உய்வழி யொன்றை அறிஞர் கண்டு பிடித்தளித்துள்ளனர். ஒவ்வொன்றும் ஒரு வகை யோகமாகும். ஆக கரும யோகம் பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம் என்னும் நான்கு நெறிகளுள் யாதேனும் ஒன்றைப் பெரிதும் வற்புறுத்தி, பிறவற்றை அதற்குத் துணையாகக் கொள்ளும் ஒவ்வொரு மதமும். ஸ்ரீ ராமகிருஷ்ண பகவான் போதித்தருளியபடியே, நன்மணிகளாகிய பலவகை மதங்கள் வழியாக ஊடுருவிச் சென்று, அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் கயிறாக நிற்பவர் கடவுளே. வேற்றுமைகளுள் ஒற்றுமையையே படைப்பின்கண் அமைந்துள்ள நியதியாதலின், வேற்றுமை தடுக்கவொண்ணாத அவசியமான ஒரு நிகழ்ச்சியாவது போன்று ஒற்றுமையும் இன்றியமையாத ஓர் இலக்கணமே. ஒரே உண்மையைப் பலவாறு உரைத்தல் இயல்பாகும்; அவ்வுரைகள் ஒவ்வொன்றும் அந்தந்த முறைப்படி உண்மையேயாம், ஒரே பொருளையும் பலதிசைகளிலிருந்தும் பலநிலைகளிலிருந்தும் பலர் காண்பாராயின், அனைவரும் வெவ்வேறு விதமாகக் காண்பாராதலின், வெவ்வேறாகவே அதனை உரைப்பர்; ஆயினும் அனைவரும் கண்ட பொருள் ஒன்றேயாம். எல்லையற்ற பரம்பொருளைப் பற்றிய ஞானக் கடலினிடை மூழ்கும் மக்களின் மனங்களாகிய கலங்கள் வெளிவரும் போது, தத்தம் அளவுகட்கும் வடிவங்கட்கும் ஏற்ப ஞான நீரை வெளிக்கொணர்கின்றன; ஞானததின் அளவும் வடிவும் தவத்திற்குத் தக்கவாறு வேறுபடும் எனினும், ஞானப் புனல் ஒன்றேயாம். "எல்லாச் சமயங்களிலும் பொதுப்பட ஓர் உண்மை உண்டாயின், அது பரம்பொருளை உணர்ந்திருப்பது ஒன்றே யென்பேன். இலக்ஷியங்களும் நெறிகளும் வேறுபடுவனவாயினும், அவ் அனுபூதியே மையப்புள்ளியாகும். ஆயிரம் வெவ்வேறான ஆரக்கால்கள் இருப்பினும் அவை கிளம்பும் பொதுவிடம் ஒரேமையமன்றோ? அம்மையமே பரம்பொருள் அனுபூதியாம்" என்று போதிப்பார் சுவாமிகள். உண்மை யுரைக்கின், சமயம் பரம்பொருளைப் பற்றிய அனுபூதியே. அவ் அனுபூதியோ உரை மனங்கட்கு அப்பாற்பட்டதாதலின், அதனை அனுபூத பெற்றவர் பலர் உரைக்க முயலுங்கால், அவரவரது அறிவிற்கும் இயல்பிற்கும் ஏற்ப வெவ்வேறாக உரைப்பார். அனுபூதி யொன்றே, உரைகள் பல—இதுவே சமய ஒருமையாகும். "வேறுபடும் சமய மெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால், மாறுபடுங் கருத்தில்லை" யென்றும், "அவரவர் தமதமது அறிவு அறிவகைவகை அவரவர் இறையவர் என அடி அடைகுவர்" எள்றும் மெய்யுணர்ந்த பெரியார் கூறியதற்கு விரிவுரையே சுவாமி விவேகாநந்தரது போதனை.

மூன்றாவது ஞானக் கருத்தாவது வாழ்வின் ஒருமையே. வாழ்வாவது மறதியால்

இழந்த பரம்பொருளை மீண்டும் நாடும் ஒரு முயற்சியேயாம். அறிந்தோ அறியாமலோ யாம் செய்யும் முயற்சிகள் அனைத்தும் இறைவனது இருப்பினையும் நமது உண்மையியல்பினையும் நமக்கு நினைவூட்டுதற்காக அமைந்த செயல்களேயாம்; அதனையே பயனாகக் கொண்டது மனித வாழ்வு. நமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும் உண்ணின்று தூண்டுவதும், அதனைப் பின்னர் இயக்கி வருவதும், மெய்யை நாடும் நோக்கமே. மெய்ப்பொருளினின்றும் புறப்பட்ட நம் வாழ்வு அதைவிட்டு விலகி எவ்வழிச் செல்லினும், முடிவில் அவ்வழி வட்டமாயமைந்து, புறப்பட்ட இடமாகிய மெய்ப்பொருட்கே செலுத்தும் பான்மையதாகும். ஆதலின் மனிதனது கருமங்கள் யாவும், அவற்றின் உண்மையியல்பை உய்த்து நோக்குவார்க்கு, ஞான சாதனங்களாகவே அமையும். இவ்வுண்மையை உணர்ந்து கருமங்களைப் பின்பற்றுவோமாயின் வீட்டைவிட்டு வெளியேறிய நம்மை விரைவில் வீட்டை நோக்கிக் கொணர்வதை உணரலாகும். இக்காரணத்தால் வாழ்க்கைக்குரிய முயற்சிகளை இலௌகிகம் (உலகியலைச் சார்ந்தது) வைதிகம் (ஞான நெறியைச் சார்ந்தது) என இரு பிரிவாக்குதல் தவறு. மனிதன் தனது உடல்வாழ்விற்காகச் செய்யும் தொழில்கள் யாவும் ஏற்றந்தாழ்வின்றி ஞான சாதனங்களாக அமையும் மேம்பாடு வாய்ந்தனவாம். இறைவனுக்கு வழிபாடு இயற்றும் தொழிலாயினும், ஊனைவிற்று வயிறு வளர்க்கும் தொழிலாயினும், வேதமோதும் தொழிலாயினும் பாதகர்கட்குத் தண்டனை யளிக்கும் தொழிலாயினும், யந்திரங்களை யோட்டும் தொழிலாயினும்,பல உத்தியோகஸ்தர்களை வைத்து வேலை வாங்கும் கண்காணிப்பாளரது தொழிலாயினும், சித்திரம் எழுதுவோனாயினும் சாலையைச் செப்பனிடும் கூலிவேலைக் காரனாயினும், கானகம் சென்று தவஞ் செய்வோனாயினும் சோதனைக் களத்தே உட்புகுந்து ஒரு புதிய கருவியையோ கொள்கையையோ கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ள தற்கால விஞ்ஞான நிபுணனாயினும்,—அனைவரும் தமது முயற்சியை மெய்ப்பொருளை நாடுதற்குத் துணையாக அமைத்துக் கொள்ளலாம். தொழிலன்று ஞான சாதனமாவது, தொழிலின் மீது கொள்ளும் மனப்பான்மையே — இது ஒரு பேருண்மை. மனத்தை உண்முகமாக்கி அகவுலக ஆராய்ச்சியில் ஈடுபடினும், மனத்தைப் புறமுகமாக்கி வெளியுலகப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சியில் இடையறாது செலுத்தினும்,மேலும்மேலும் மனம் ஆழ்ந்து செல்லுமாயின், முடிவில் பரம்பொருளைக் காணாது தப்புதல் அரிதேயாம். "அநேகமும் (பலவும்) ஏகமும் (ஒன்றும்) உண்மையிலே ஒரே மெய்ப்பொருளாயின், வழிபாட்டு முறைகள் அனைத்துமட்டுமல்லாமல், தொழில் முறைகள் அனைத்தும் உழைப்பு முறைகள் அனைத்தும் படைக்கும் முறைகள் அனைத்தும் சம அளவிற்கு ஞான நெறிகளாகும். உலகியலைச் சார்ந்தது ஞான நெறியைச் சார்ந்தது எனும் வேறுபாடு இனி இல்லை. பாடுபடுவதும் பிரார்த்தனை செய்வதாகும். வெல்லுவதும் துறப்பதேயாகும். வாழ்வே ஞானமயம். உடைமையைப் பெறுவதும் காப்பதும் அதனை விடுவதும் விலக்குவதும் போன்று கடுமையான ஒரு தருமப் பொறுப்பேயாகும்......தொழிற்களமும் கல்விகற்கும் அறையும் வயலும் போர்க்களமும், முனிவரது தவக் குடிலையும் கோயிலின் கதவையும் போன்று இறைவன் மனிதனைச் சந்திப்பதற்கு ஏற்ற மெய்யான இடங்களாகும். மனிதனுக்குப் பணி செய்வதற்கும் இறைவனை வழிபடுதற்கும், ஆண்மைக்கும் நம்பிக்கைக்கும், உண்மையான அறவாழ்விற்கும் ஞானவாழ்விற்கும் வேறுபாடு இல்லை." கலையும் விஞ்ஞானமும் சமயமும் ஒரே உண்மையை உரைக்கும் மூன்று வெவ்வேறு வழிகளே என்றும், ஆனால் இவ்வுண்மையை உணர மிகப் பரந்த, உயர்வற உயர்ந்த அத்துவித ஞானக்கொள்கை வேண்டும் என்றும் சுவாமி விவேகாநந்தர் ஒரு முறை தமது சீடரொருவரிடம் செப்பியருளினர். அவர் உலகத்தார்க்குப் போதித்துள்ள கருமயோக நெறி, அவர் தமது வாழ்வாலும் அறிவாலும் நிலைநாட்டியுள்ள புதுக் கருமயோக நெறி, ஸமூக வாழ்க்கையில் மிக்க ஸமரஸத்தை விளைத்து, ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் இன்பவாழ்வையும் விளைக்கப் பெரும் ஏதுவாகும் என்பதில் ஐயமேயில்லை.

சுவாமி விவேகாநந்தரின் போதனைகளாகிய இம்மூன்று ஒருமைக் கருத்துகளும் (ஆன்ம ஒருமை, சமய ஒருமை, வாழ்வின் ஒருமை) பொதுவாக உலக மக்கட்குள்ளும், சிறப்பாக நமது நாட்டு மக்கட்குள்ளும் ஸமரச மனப்பான்மையை ஊட்டி, பூசல்களையும் பிணக்குகளையும் போரையும் ஓட்டி, ஒற்றுமையையும் பலத்தையும் சாந்தியையும் உள்ளங்களில் நிலைநாட்டும் வன்மை வாய்ந்தனவாகும். மனித ஆன்மா தெய்வத் தன்மை வாய்ந்ததாதலின், அதனை வெளிப்படுத்துவதே மனித வாழ்வின் இலக்ஷியமாம்; அவ்வெளிப்படுத்தும் முறையை அறிந்து பின்பற்

றும்படிக் கூறுவதே சமயம்; வாழ்விலுள்ள எவ்வித முயற்சியும் அந்நெறியிற் செல்லுதற் கேற்ற சாதனமாகலாம் ஆதலின், தொழில் கள் அனைத்தும் யோக வாழ்விற்குச் சமமாகப் பயன்படும். ஆக, வாழ்வின் தத்துவம் நெறி. பயன் என்னும் முப்பெரும் உண்மை களில் உள்ள ஒருமையை விளக்கும் போதனைகள் மனித வாழ்விலுள்ள வெளிப்படையான வேறுபாடுகட்கு அடிப்படையில் விளங்கும் ஒருமையை எடுத்துக் காட்டுகின்றன. இவை நமது அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் இயன்றவரை மறவாது நினைக்கப்படவும் சிந்திக்கப்படவும் அனுபவமாக்கப் படவும் தகுந்தனவாகின்றன: தனி வாழ்விலும் ஸமூகவாழ்விலும் உயர்வையும் பேரின்பத்தையும் சாந்தியையும் புகட்டும் வலிவுள்ளன. இக்காரணம்பற்றியே நமது நாட்டுமக்கள் சுவாமி விவேகாநந்தரது பிறந்த நாளை ஆண்டிற்கொருநாள் கொண்டாடிப் பின்னர் அவரை மறதிக்கடலில் ஆழ்த்துவிடுவது, கடமையையும் நன்றியையும் கைவிடுதலாகும். மனித வாழ்க்கையில் எத்துறையில் ஈடுபட்டிருக்கும் மனிதனுக்கும் பழுதற்ற சுயநலமும் விழுமிய பரநலமும் கைகூடவேண்டும் எனும் அவா உண்டாயின், அவருடைய கருத்துக்களின் ஏற்றத்தைத் தெளிய உணர்ந்து, மனதிற் பதித்துச் செயலளவாகக் கொணரக் கங்கணங் கட்டிக்கொள்ளல் வேண்டும். அதுவே அப்பெரியாரை வழிபடுதற்குரிய சீரிய முறையாகும்: அங்ஙனம் வழிபட்டபின், அவர் போதித்தபடியே வழிப்படும் முயற்சியில் இறங்கவேண்டும். பின்னர், தான் பெற்ற பேற்றை வையம் பெற்று இன்புறுமாறு, விருப்பமுடையாரை யெல்லாம் வழிப்படுத்த முயலவேண்டும். அன்றே சுவாமி விவேகாநந்தர் பரதமாநாட்டிற்காகப் பிறந்து வாழ்ந்து உயிர் துறந்த நிகழ்ச்சி பயனை விளைவிப்பதாகும். விவேகாநந்தரின் வீரமும் தீரமும் ஈரமும் வெல்க!

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B. A.

அத்யாயம் 6

தூய மனத்தில் திளைக்கும் இன்பம்

ஒரு நல்லோனுடைய சிறப்பு அவன் தூய உள்ளம் உடையவனாய் இருப்பதிலே உளது.

தூய மனம் பெற்று இரு. அதனால் எப்போதும் இன்பம் உடையோனாய் இருப்பாய் என்பது திண்ணம்.

தூய உள்ளம் பெற்று இருப்பது மிகப் பல பெரிய விஷயங்களையும் அனுபவங்களையும் தாங்கும் திறமையைத் தருகிறது; துன்ப காலத்தும் முகமலர்ச்சியைக் கைவிடாது.

தீய உள்ள நிலை எப்போதும் குழப்பத்தையும் அச்சத்தையுமே தரும்.

உன் உள்ளமே உன்னை உறுத்திக்கொண்டு இராவிடில், நீ இன்ப அமைதியில் இனிதாக இருப்பாய்.

தூய மனத்துடன் நன்றாகப் பணியாற்றி விட்டால் ஒழிய மற்ற ஒருபோதும் மகிழ்ச்சி கொள்ளாதே.

தீயோருக்கு ஒரு போதும் உண்மை இன்பம் கிட்டாது; அன்னார் உள்ளூர அமைதியையும் உணரார். ‘அறவழிவாழாக்கொடியோருக்கு அமைதியே கிடையாது’ என்பது ஆன்றோர் அருள் மொழி.

‘நாங்கள் அமைதி உடன் இருக்கிறோம். எங்களுக்கு ஒரு கெடுதியும் வராது. எவன் எங்களுக்கு இடையூறு செய்யத்துணிவான்?’ என்று இறுமாந்து அத்தீயோர்கள் கூறினால் அதை நம்பி விடாதே. ஏனெனில் திடீர் என இறைவன் சீற்றம் எழும். அவர்கள் செயல்கள் அனைத்தும் பாழ்படும். அவர்கள் எண்ணங்கள் அனைத்தும் அழிந்து விடும்.

2. பக்தியுள்ளவனுக்குத் துன்புறுவதில் பெருமை கொள்வது கடினமன்று. ஏனெனில் அத்தகைய பெருமை இறைவனுக்காகத் துயருறுதலின் பெருமையேயாகும்.

மக்களால் கொடுக்கப்பட்டு மனிதர் பெறும் இன்பம் மிக்க குறுகிய காலத்திற்கே நிற்கும்.

உலகு அளிக்கும் பெருமையைத் தொடர்ந்தே துயரம் எப்போதும் வருகிறது.

நல்லோர் பெருமையும் அவர்களது நன் மனச்சாட்சியிலே இருக்கிறது; மற்ற மனிதர் நாவில் அல்ல. நேர்மையாளரது மகிழ்ச்சி தெய்வத்தைப்பற்றியதும் தெய்வத்தினிடத்து

உண்டாவதுமாகும். மெய்ப்பொருளைப் பற்றியது அவர்களது இன்பம்.

உண்மையானதும் என்றும் அழியாததுமான பெருமையை நாடுபவன் அழியும் தன்மையுள்ள இவ்வுலகச் சிறப்பைப் பற்றிக் கவனிப்பதே இல்லை.

இவ்வுலகப் பெருமையைத் தேடித்திரிபவனும், அதை அடியோடு துச்சம் எனத் தள்ளாதவனும், தெய்வீக இன்பப் பெருமையைச் சிறிதாக மதிப்பவன் எனக் காட்டி விடுகிறான்.

மக்களின் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பாராட்டாது இருப்பவன் உள்ளத்திலே பேரமைதியைப் பெற்று இன்புறுகிறான்.

3. தூய உள்ளத்தோன் எளிதில் திருப்தியையும் அமைதியையும் எய்துகிறான்.

பிறரால் புகழப்படுவதாலே நீ அதிகத் தூயோனாக ஆகிவிட மாட்டாய்; அல்லது குறை கூறப்படுவதால் நீ பயனற்றவனாக ஆகிவிட்டாய்.

நீ உண்மையில் எப்படி உள்ளாயோ அதுவே உனது நிஜமான நிலை. இறைவன் திருமுன் உனது உண்மைநிலை எதுவோ அதைவிட உயர்ந்தவனாக வெறும் வார்த்தைகளால் ஆகிவிடமாட்டாய்.

உனக்குள்ளே உனது உண்மைநிலை என்ன என்பதைக் கவனிப்பவனாக இருப்பாயாகில் உன்னைப்பற்றிப் பிறர் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனிக்கவே மாட்டாய்.

மனிதன் முகத்தைப் பார்க்கிறான்; ஆனால் இறைவன் உள்ளத்தை நோக்குகிறான். மனிதன் செயல்களைப் பற்றிச் சிந்திக்கிறான்; ஆனால் இறைவன் அச் செயல்களைச் செய்யத் தூண்டிய கருத்துக்களைச் சீர்தூக்கிப்பார்க்கிறான்.

எப்போதும் நல்லதே செய்து கொண்டு, தன்னைப்பற்றிப் பெருமிதம் இன்றி இருத்தலே அடக்கம் உள்ளவருக்கு அடையாளம்.

பிறரிடமிருந்து ஆறுதல் பெற மறுக்கும் மனப்பான்மை உயர்ந்த உள்ளத் தூய்மைக்கும், தன்னம்பிக்கைக்கும் அடையாளமாம்.

4. வெளியிலிருந்து தனக்கென ஒரு சாட்சியை நாடாதவன் முழுதும் இறைவனிடம் ஒப்படைத்துக் கொண்டவன் என்பதைக் காட்டுகிறான்.

'ஏனெனில் ஏற்றுக் கொள்ளப்படுவன் தன்னையே சிலாகித்துக் கொள்பவன் அன்று-இறைவனால் பாராட்டப் படுபவனேயாம்' என்கிறார் போதகர் பால்முனிவர்.

புறப்பற்றினால் வெளி வாழ்வில் தங்கிவிடாது, உள்ளூற இறைவனைப்பற்றி நடத்தலே ஒரு ஞானியின் நிலையாகும்.

அத்தியாயம் 7

அனைத்திற்கும் மேலாக இறைவனை விரும்பல்

இறைவனை விரும்பல் என்பது என்ன என்றும், இறைவனுக்காகத் தன்னைத் துச்சமாகக் கருதல் என்ன என்றும் உண்மையில் அறிந்து கொண்டவன் அருள் பெற்றவனாவான்.

ஆன்ம காதலனான இறைவனுக்காக நீ காதலிப்பவற்றையெல்லாம் விடல் வேண்டும். ஏனெனில் பொருள்கள் அனைத்திற்கும் மேலாக இறைவன் ஒருவனே காதலிக்கத் தகுந்தவனாவான்.

படைக்கப்பட்ட பொருள்களின் மேல் வைக்கும் விருப்பம் ஏமாற்றம் தரக்கூடியது, மாறக்கூடியது. இறைவனிடம் வைக்கக் கூடிய அன்பு உண்மையானது, நீடித்து இருக்கக்கூடியது.

இவ்வுலக உயிர்களைப்பற்றி நிற்பவன் அழியும் இயல்பினவாய அவற்றோடு தானும் அழிவான். அழியாத இறைவனைத் தழுவுவன் என்றைக்கும் கெடாது திடமாக நிற்பான்.

இறைவனையே விரும்பு; அவனையே உனது நண்பனாகக் கொள். அனைத்தும் அழிந்தாலும், அவன் உன்னைக் கைவிடமாட்டான்; உன்னை இறுதியில் அழிந்து போகவும் விடமாட்டான் இறைவன்.

நீ விரும்பினாலும் விரும்பாவிடினும் ஏதாவது ஒரு சமயத்தில் நீ எல்லாவற்றில் (பொருள்களிடம்) இருந்தும் பிரிந்து விட வேண்டியவன்.

2. அனைத்தும் தவறிவிட்ட போதிலும் இறைவன் ஒருவனே உனக்கு உதவியளிக்கக்கூடும்: ஆதலின் வாழ்விலும், இறப்பிலும் இறைவனையே அணுகி நில்; அவனுடைய பாதுகாப்பிலேயே உன்னை ஒப்படைத்துக் கொள்.

இறைவனது இயற்கை யாதெனில் தனக்குப் போட்டியாக உன் உள்ளத்தில் எதுவும் இருப்பதைச் சகிக்காமையே. உனது உள்ள முழுவதையும் தனக்குத் தனி உரிமையாக்கிக் கொண்டு, தனது அரியாசனத்தில் ஏக நாயகனாகத்தான் வீற்றிருப்பான்.

மற்றப்பொருள்கள் உயிர்கள் அனைத்தையும் உனது உள்ளத்திலிருந்து நீக்கி அதை

வெறுமையாக வைத்துக் கொள்வாயானால் இறைவன் உன்னுடன் விரும்பி வசிப்பான்.

இறைவனைத் தவிர வேறு மனிதரிடம் எதை நம்பி வைத்திருந்த போதிலும் அதை நீ இழந்தவனே ஆவாய்.

காற்றடைத்த நாணலை நம்பி அதன்மேல் சாய்ந்து நில்லாதே. ஊன் (மாம்ஸப்) பொருள்கள் அனைத்தும் புல் போன்றவை. அவற்றின் பெருமையெல்லாம் வயற்புற மலர்களைப்போல வாடிவீழ்ந்து விடும்.

3. மனிதரது வெளித்தோற்றத்தை மட்டும் நோக்குவாயானால் நீ மிக விரைவில் ஏமாந்து விடுவாய்.

ஏனெனில் பிறரிடம் உனக்கு ஆறுதலையும், லாபத்தையும் நீ தேடுவாயானால், அடிக்கடி அடையும் நட்டத்தையே காண்பாய்.

இறைவனையே எல்லாவற்றுள்ளும் தேடுவாயானால் அவனையே திண்ணமாக எங்கும் காண்பாய்.

உன்னையே எங்கும் காணத் தேடுவாயானால் அப்படியே உன்னையும் காண்பாய். ஆனால் அதனால் நீ அழிந்தே போவாய்.

ஏனெனில், இறைவனைத் தேடாமையால் மனிதன் தனக்கே விளைத்துக் கொள்ளும் தீங்கு, உலக முழுவதும், அவனது பகைவர்களும் அவனுக்கு விளைக்கக் கூடியதினும் மிகுதியேயாகும்.

ஞான வீரம்

பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்

வீரம் என்பது பிறர்க்கு அஞ்சாமை, எதிர்த்தல் என இருவகையாய் நிகழ்கின்றது. அஞ்சாமை இல்லாவிடில், பிறரை எதிர்த்தல் நிகழாது. ஆகவே அஞ்சாமையே தலைசிறந்தது.

வீரன் பிறருடைய துன்பங்களுக்கு அஞ்சுவதில்லை. அவரை வென்று அவரால் வருந் துன்பங்களை அடக்கிவிடுகின்றான். ஆனால் சிலர் அத் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டிருந்து, சிலகாலஞ் சென்றபின் தம் பகைவர்களை எதிர்த்து அடக்கிவிடுகின்றனர். அவர்களைப் போர் செய்யும் ஆட்டுக்கடாக்களுக்கு ஒப்புக் கூறலாம். அவை போரிடும் போது பின் வாங்குவது அஞ்சி ஓடுவதற்கன்று. மேலும் பன் மடங்கு வலிமையுடன் பொருது வெல்வதற்காகும்.

‘ஊக்க முடையா னொடுக்கம், பொருதகர்
தாக்கற்குப்பேருந் தகைத்து’

என்றார் பொய்யாமொழியார். தம்மை விட வலிமையிற் குறைந்தார் எத்துன்பஞ் செய்கினும், வீரர் முரண்படார். மேலும், அத்தகையார்க்கு வேண்டும் நன்மைகளைச் செய்வார். அவ்வாறு நன்மை செய்வதே அவர் தம்மைப் பார்க்கிலும் வலிகுறைந்தாரைத் தண்டிக்கும் நெறியுமாகும்.

‘இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்’

என்பது காண்க. இந்நெறி தம்மைவிட இழிந்தவரிடத்து மட்டுமே கடைப்பிடிக்கத் தக்கது. தம்மைவிட உயர்ந்தாரையும் தமக்கு ஒத்தாரையும் உண்மை வீரர் எதிர்த்துப் போராடுவர். பிறர்க்குத் துன்பஞ் செய்யாது பொறுத்துக்கொள்வது பொறுமை வீரம் என்று கூறப்படும்.

வாழ்வதாயின், ஒவ்வொருவரும் வீரமாக வாழவேண்டும். கோழைத்தனம் குடியைக் கெடுக்கும்; வீரம் வெற்றி விளைக்கும். கோழைகளுக்கு இவ்வுலகில் இன்புற வாழ இயலாது. சிறு பிள்ளைகளுங்கூடக் கோழைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்களை நகைத்து இகழ்வார். தம்மாலான துன்பங்களைச் செய்வார்கள். ஆயின், மற்றை மக்களும் விலங்குகளும் கோழைத்தன்மை உடையவர்களை என்னதான்செய்யமாட்டார்கள்? எத்தொழிலைச்செய்யினும் வீரத்தோடு செல்க. எதவத்தைப்பட்டாலும் வீரத்தொடு படுக. வீரமுடையவராய் வாழ வேண்டுமென்பதே வேதங்களின் நோக்கம்.

நமக்குப் புறப்பகை, அகப்பகை, என்று இரு பகைகள் உள. இவற்றுள் ஒன்றுக்கொன்று தாழ்ந்ததல்லவாயினும்; அகப்பகை நம்மை வஞ்சித்து அழித்துவிடும். புறப்பகை நமது புறவின்பத்தைக் கெடுக்கும். வெளிப்பகைஞன் நம் செல்வம், அதிகாரம், மதிப்பு, செருக்கு, இன்பம் என்னும் இவைகளை—ஏன் நமது வாழ்வையுங்கூட—அழித்துவிட முயல்

கின்றான். அவனை அடக்கவோ அடங்காவிடில் அழிக்கவோ செய்யாவிடில், நம்வாழ்வு செல்லாது. ஆயின், அப்புறப்பகைஞன் செய்யுந் துன்பங்களை நாம் அறிந்தே விலக்கலாம். அஞ்சாது அவன்முன்னின்று போராடலாம். நம்மொடு நட்பு உடையவனைப் போல வீட்டில் உடனுறையும் அகப்பகைவனை, நாம் வீரமுடையவராயினும், வெல்வது அரிதாகும். ஏனெனில் அவன் நமக்குச் செய்யுந் தீங்குகள் நம்மால் எளிதில் அறியப்படுவதில்லை; அவை இறுதியில் விளங்கி நீக்கிக் கொள்ளலாகாத பெருந்துன்பங்களை விளைத்து விடுகின்றன. நாம் அவனை முற்றிலும் நம்பி விடுவதனால், அவன் எளிதாகவே தீங்குகளை ஆற்ற முனைகின்றான். மரத்தின் வேரைச் செல் அரிப்பது போல அவன் நமது வாழ்வாகிய மரத்தின் வேரை அறுத்து வருவதை, நாம் ஆராய்ச்சியால் கண்டுபிடித்து, அவனை அப்புறப்படுத்தி வெல்ல வேண்டும். இல்லையேல், நமக்கு வீரம் இருந்தும் யாதொரு பயனும் உண்டாவதில்லை.

புறப்பகை பெரிதாகினும் அதனால் வரும் தீங்குகளை வெளிப்படக்கண்டு அகற்றுவது போல உட்பகையால் வருந்தீங்குகளை அகற்ற இயலாமையால், அது மிகச் சிறிதாக இருப்பினும், பெருங்கேடுகளை விளைத்துவிடும். புறப்பகையைப் புறக்கணித்தாலும் ‘ உட்பகையைப் புறக்கணிக்கலாகாது’

‘எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை யுள்ளதாங்கேடு’

என்றார் நாயனார்.

உலகிலேயே மிகச்சிறந்ததொருவீடு நமக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது. அவ்வீட்டில்வாழும் பகைவர்கள் பலர். அவரை நாம் நமக்கு நன்மை செய்வதாக நம்பிவருகின்றோம். அவர் நமது இன்பத்தைச் சிதைத்து வாழ்வை வேரறுத்து வருகிறார்கள். மேலும், தாம் செய்கின்ற தீங்குகளை இன்பம் போலக் காட்டி நம்மை ஏமாற்றி வருகிறார்கள். எள்ளின் பிளவு போன்ற உட்பகையே பெருந்தீங்குவிளைக்குமெனில், எண்ணில் பலராகிய இவ்வுட்பகைவர்களது பகை மலைபோல் இருக்கும் பொழுது, நமக்கு உண்டாகுந் தீங்குகளைக் குறித்து என்ன சொல்ல இருக்கின்றது? உலகில் வாழ்வதுவரை துன்புறுத்தும் உட்பகைவர்களைப் போல் அன்றி இவர்கள் நாம் உயிர்நீங்கியபின்புந் தொடர்ந்து துன்புறுத்துபவர்களாக இருக்கின்றார்கள். இவர்களது கூட்டுறவை நாம் விரைவில் விட்டொழித்தல் வேண்டும்.

இவ்வுட் பகைவர்கள் யாவர்? இவர்களே மிகவுங்கொடியவர்களான இராகம், துவேடம் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடம்பம், தர்ப்பம், ஈருடை (ஈர்ஷா) அசூயை, அகங்காரம் என்னும் பதின்மூவர். இவற்றுள், இராகம்-பெண் போகம் நுகரவேண்டும் என்ற ஆசையை விளைத்து அகத்திருந்துதானே தாரறுத்து, நம் அறிவு, தகைமை இன்பங்களை அழிக்கின்றான். பனை வெல்லத்தைக் கொடுத்துச் சிறிது இன்பத்தை நுகரச் செய்து, நாய்களை வயப்படுத்தி, அவற்றைத் தன் விருப்பப்படி வேட்டையில் விட்டு விளையாடி அல்லற்ப்படுத்தும் புலைஞனைப் போல், இராகம் என்பவன் சிற்றின்பந் தந்து தன் விருப்பப்படி நம்மைக் கொண்டு வேட்டையாடி நாம் அடைய விருக்கும் பேரின்பத்தைத் தலையெடாமல் மாற்றிவிடுகின்றான். இப்படிப்பட்ட உட்பகைவனை அடக்கி வெல்வதே வீரம். அல்லாத வீரம் புறவீரம்; அவ்வீரம் நம்மைப் பிறவிப் பாழ்குழியில் தள்ளி விடும்.

அடுத்த உட்பகைஞன்-துவேடம். இவன் பழிக்குப் பழி வாங்கும் இயற்கை உடையவன். யாரேனும் ஒருவர் ஒரு துன்பஞ்செய்தால், அவர் மெலியவர் என்றும் பாராது எதிர்த் துன்பம் செய்ய வேண்டும் என்ற தீய எண்ணத்தைத் தந்து நம்மைக் கெடுத்து வருகின்றான். ‘நன்னயஞ் செய்தல்’ என்னுஞ் சிறந்தகுணம் இவனிடத்தில் இல்லையாதலால் இவனால் உண்மை வீரம் தலை தாழ்கின்றது.

காமம்-ஆகிய பகைஞன் வீடு நகரம் செல்வம் முதலியவற்றை மேன்மேலும் பெற வேண்டும் என்ற விருப்பத்தை விளைக்கின்றான்; உலகமெங்கும் கண்ட கண்ட இடமெல்லாம் ஆசையாகிய குறுங்கண் வலையை வீசி நம்மை அகப்படுத்துகின்றான். இவனுடைய சூழ்ச்சியை உணராமலே நாம் பல பொருள்களையும் ‘நன்மை தரும்’ என்று கருதி விரும்பி, அவற்றைப் பெறுவதற்காக உடல் பொருள் ஆவிகளை விடுக்கவும் ஒருக்கமாகி விடுகிறோம். ஆசைகளோ அளவில்லாமல் ஒன்றன்மேல் ஒன்றாய் வந்து முடிவுகாண முடியாதபடி நம்மைச் சூழ்ந்து கொள்கின்றன. ஆசைகள் நிறைவேறாமலே எதிர்பாராத சாக்காடும் தலைவருகின்றது. ஆகவே நம்மை அடிப்படுத்துபவனாகிய இவனுக்கு அடிமைப்பட்டு உழல்வது வீரம் அன்று. வீரத்தின் பயன் அடிமை வாழ்வு அன்று.

குரோதம்—என்னும் பகைவன் பிறர் மீது கோபங்கொள்ளும்படி ஏவி நம்மைச் சீரழிக்கின்றான். சிறுகாரியங்களிலுங் கூடச்சிறிது

நேரம் பொறுத்திருக்கும்படி நம்மை அவன் விடுவதில்லை. இவன் நம்முடைய விருப்பத்துக்கு இணங்கிவராதவன். இவனை அடக்கி ஒடுக்கி அமர்த்தும் வரை வாழ்வில் எத்தகைய இன்பமும் உண்டாகாது; மாருக, எதிர்பாராத பல துன்பங்கள் தலைப்படும்.

உலோபம்-பிறர் ஓர் துரும்பு வேண்டினும் இல்லை என்று கூசாமற் சொல்லச்செய்து நம்மைக் குணமழித்து நிலை குலைக்கின்றது. இல்லைஎன்று கூறிச்சேர்த்துவைத்த பொருள்களில் நாம் இறுதிக் காலத்துக் கொண்டு போவதும் ஒன்றுஇல்லை என்பதைக், 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே' என்பது முதலிய ஆன்ரோர் உரைகளால் அறிவோமாயினும், நாம் ஒன்றையும் பிறர்க்குக் கொடுக்க விரும்பாமல் அதையும் இழந்து போகச் செய்வது, குறுகிய நோக்கமும் பிறர் துன்பங் காண்பதில் விருப்பமும் இடுக்கப் பான்மையும் உடைய இந்த உலோபம் என்னும் பாவியேயாவான். இவனை வெல்வதன்று, வேரறுக்கத்தக்க வீரம் நமக்கு உண்டாக வேண்டும்.

'பற்றுள்ள மென்னும் இவறன்மை, எற்றுள்ளும்
எண்ணப்படுவது ஒன் றன்று'

என்று பெரு நாவலரும் கூறினர்.

நாம் பெற்ற பொருள்களில் அளவில்லாத பற்றை உண்டாக்கி அதனை மேன் மேலும் வளர்த்து, 'அப்பொருள்களே தமக்குத் தஞ்சம்' என்று எண்ணும்படி செய்து, நம் கடமைகளையும் பேரின்பத்தையும், கடவுளையும் மறப்பித்து நம்மை மயக்கிக் கேடு சூழ்வது மோகம் என்னும் பெரும் பகைவன். நம் நண்பர், உறவினர், பொருள்களின் உலக வாழ்விற்குத் தக்கவாறு நம் கடமைகளைச் சார்ந்து ஒழுகுவதை விடுத்து, என்றென்றும் நமக்கு உரிமை உண்டு என்ற எண்ணத்தையும் அத்யாசத்தையும் பற்றையும் பிறப்பித்து வறப்பிக்கும் இக்கொடும் பகைஞன் நம்மை இடம் வாய்த்தபோது அடும் பகைஞனுகையால், இவனை உடனே அழித்துவிட வேண்டும். கடமை என்னும் வாளால் இவனைத் துண்டிக்க வேண்டும். தீயோரை வஞ்சித்துக் கொல்வதும் பாவமன்று ஆகையால், இவனெடு நட்பாடியாவது, இவனைச்சாகும்படி புல்லவேண்டும். முற்றிய வீரம் இருந்தால், இவனை எதிர்த்து அழிக்க முற்பட வேண்டும்.

மதம்—என்னும் உட்பகைவன் சினத்தைப் போலச் சேர்ந்திடங்கொல்லி, செல்வம், வலிமை முதலியவற்ருல் செருக்கு அடைந்து 'செய்யத்தக்கது தகாதது' என்ற உணர்ச்சி இல்லாமல், மேலோர் தன்னை இகழ்வதையுங் கருதாமல், நாணம் இன்றிக் குதித்துக் கூத்தாடுபவன் இவன். செல்வமும் வலிமையும் மற்றுள்ளவும் கணநேரத்தில் நீரிற் குமிழி போல அழிந்துவிடும் என்னும் உண்மையுணர்ச்சியில்லாதவன் பெரும்பேதை. அறிவற்ற இவனது நட்பு நல்லோர்க்கு ஆகாது.

'செய்தக்க வல்ல செயக்கெடும், செய்தக்க
செய்யாமையானுங் கெடும்'

என்னும் விவேகம் இல்லாத இவனுல் நம் செய்கை நலன்களும் நன்னேக்கங்களும் அழிந்துவிடுகின்றன. இவனை அடியற அழிப்பது வரை நமக்கு இன்பத்துயில் உண்டாகாது. நாம் உண்மை வீரர் என்பது விளங்க வேண்டுமானல், இவனை உலகில் நின்றும் அகற்றிவிடவேண்டும்.

நம்மைப் பார்க்கிலும் செல்வம் இன்பம் முதலியவற்றில் மேன்மை பெற்று வாழ்வதைப் பொறுக்கவியலாதவாறு மாற்சரியம்-என்பவன் தீய எண்ணங்களை உண்டுபண்ணுகிருன். அதனுல் இவன் செல்வம் இன்பம் முதலியவற்றை அழித்து விட நெறிதேடுகின்ருன். இவனுல்தான் நமது மனம் புழுங்குகிறது, கவலையுறுகின்றது; அல்லற்படுகின்றது, இவன் இருப்பதுகாறும் நமக்குத் துன்பமே தான். குற்றம், கோள், தற்பெருமை முதலிய இந்திரஜால மைகளை மனக்கண்ணுடியில் புரட்டி, அதை மயக்கி அல்லும் பகலும் அல்லற்படுத்துகிறவன் இவனே. இவனை, நன்மையை விரும்புவோமாகில், நாடவிடலாகாது. இவன் இருக்க இடங் கொடுத்தால் கிடக்க இடங்கேட்பவன். இவன் பக்கத்திலும் செல்லலாகாது. வலிதில் இவன் நம்மை அடைந்து விட்டால்—நல்லதுதான்—நச்சுப் பாம்பை நசுக்குவது போல நசுக்கிவிட வேண்டும். இவன் பெரு நஞ்சன்; வஞ்சன்.

ஒரு துன்பம் வந்தால், அத்துன்பம் பிறர்க்கும் வரவேண்டும் என்ற எண்ணத்தை எழுப்பி நமது மனத்தகைமையை அழிப்பவன் ஈரிஷை-என்பவன். உலக முழுவதும் துன்பத்தையடைந்தால் இவன் மனம் சிறிது குளிர்ச்சியடையும். இவன் சிறிதும் நடுவு நிலைமை இல்லாதவன். இவனுக்கு இடங் கொடுப்பதனுல், நமக்கு நாமே துன்பத்தை விளைத்துக்கொள்கிரேம். இவனை முளைக்கவே விடலாகாது.

நாம் ஓர் இன்பம் எய்தின், அவ்வின்பம் பிறர்க்கும் வரலாகாது என்ற எண்ணத்தைத்

தோற்றுவிப்பவன் அசூயை-என்பவன். இவன் பிறர்க்கு வரும் இன்பங்களுக்கு உலே வைக்க முயலுவது காரணமாக, நம் இன்பங்களைக் கெடுத்து, மாருகத் துன்பங்களையும் விளைத்து விடுகின்ருன். இவனை அடிப்படத் தேய்த்து ஒழிப்பதுவே சிறந்த வீரம்.

நாம்செய்யும் புண்ணியங்களைப் பற்றி மெச்சவேண்டும் என்ற பயனற்ற நினைவை எழுப்புவன் இடம்பம்-என்பவன். இவனுல் பற்று மிகுதியடைந்து விடுகிறது. பொன்னுலாகிய விலங்குகளைப்பூட்டி நம்மைச் சிறையிடுபவன் இவனே. இவனைச்சிறைப்படுத்தி விட்டாலும் அடங்கமாட்டனுகையால், அழிப்பதே நலமாகும்.

நாமே எல்லாவற்றிலும் வல்லமையுடையவர்கள் என்ற எண்ணத்தை எழுப்பி, வாழ்வைக் கெடுப்பவன் தர்ப்பம் — என்பவன். இவனுல் நாம் நம் உண்மை வலிமையை உணராமல் அழிகின்றோம். பலவிடத்தும் தோல்வியும் நாணமும் அடைகின்றோம். இவன் மனோவிகாரங்களை மிகுதியும் உண்டு பண்ணுகின்ருன். தலையும் நிலையும் இல்லாமல் வரம்பழிந்து ஒழுகும்படி செய்து நம்மை அழிப்பவனுகிய இவனை ஒழிக்கவேண்டும்.

எல்லாவற்றிலும் 'நான்' 'நான்' என்னும் அத்தியாசத்தை விளைத்து விகற்பிக்கச் செய்பவன் அகங்காரம்,- என்னும் பெரும் பகைஞன். இவனே மற்றைப் பகைகளை எல்லாம் ஏவுகின்றவன். இவனே நம் துன்பங்களுக்கெல்லாம் அடிப்படையானவன். நம்மையே வேறொன்ருகக் கட்டி மயக்குபவன் இவனே. இவனை வெல்லுவதற்கு மிகுந்த ஆற்றலும் தகுந்த படைக்கலன்களும் வீரமும் வேண்டும். இவனை எதிர்நின்று பொருது வெல்வதே வீரம். இவன் நம் அகத்தில் அகமாய் இருந்து உலகமுழுவதுமே தன்னில் அடக்கிக்கொண்டு அவ்வுலகில் நம்மைப் புரட்டித் தோய்த்துத் தன்னைமறக்கச் செய்கின்ருன். இவனுல் நாம் உலகமயமாய் விடுகின்றோம்.

இதுவரை கூறி வந்த உட்பகைவர்களை நாம் வேறுப்பதற்கு மூன்று சிறந்த படைகள் இருக்கின்றன. அவை, இச்சை பத்தி, சிரத்தை என்பவை. இச்சையாவது உணவுட்கொள்ளவும் மலசல பாதைகளை நீக்கவும் பற்றின்றி விரும்புவது போல எத்தொழிலையும் எத்தகைய பற்றும் இல்லாமற் செய்தல். இறைவனை அடைய வேண்டும் என்று தோன்றுகின்ற மனப்பான்மை பத்தி எனப்படும். ஆசாரியனிடத்திலும் வேத சாத்திரங்களினிடத்திலும் கொள்ளும் நம்பிக்கை சிரத்தை எனப்படும். இம்மூன்று படைக்கலங்களும் நமக்கு உற்றிடத்து உதவிபுரியும். ஆதலால், இவற்றை நாம் இன்பவாழ்வின் பொருட்டுக் கைவிடலாகாது.

நமக்கு இருவித ஆற்றல்கள் இருக்கின்றன. அவை அடக்கம் எழுச்சி என்பன. அடக்கம் நம்மைப் பரம்பொருளை நோக்கி எதிர்கீழாக ஈர்த்துச் செல்கின்றது. எழுச்சி நம்மை உலகை நோக்கி எதிர்மேலாக ஈர்த்துச் செல்கின்றது. நம்மொடு தொடர்பு அற்ற உலகைத் தொடர்புடையதாகக் கருதி மயங்குவது எழுச்சி என்னுங் குணத்தினுலாகும். அடக்கம் நம்மை அந்தர் முகமாகவும் எழுச்சி பகிர் முகமாகவும் செலுத்துகிறது.

அடக்கத்தால் பொறுமையை நிலைபெறச் செய்யவேண்டும். எழுச்சியால் தீயசத்திகளை எதிர்க்கவேண்டும். எதிர்ப்பதுதான் வீரம். ஞானிகளை வீரர்கள் என்று சொல்லக் காரணம், பிருதிவிமுதல் மாயைவரையுள்ள பகைகளாகிய தத்துவங்களை அவர்கள் வென்ற தன்மையேயாம். உலக வீரம், வீரம் அன்று. மனப் பண்பில்லாத யாவர்க்கும் அவ்வீரத்தை அடையலாகும். பயனென்னை? அவர்கள் மீண்டும் மனத்துக்கும் அகங்காராதிகளுக்கும் அடிமைப் பட்டுத்தான் வாழ்கின்ருர்கள். அடிமைகளை வீரர்கள் என்பது எங்ஙனம்? மூவுலகும் அடிப்படுத்த இராவணனும் அடிமைதான்; உம்பர்தம் பிரானும் அடிமைதான். காட்டில் குடிசையில் சருகுண்டு வாழ்ந்து அகப்பகையறுத்த ஞானிதான் வீரன்; ஆண்டகையன். அடிமையற்ற வாழ்வு பிரம்மஞான வாழ்வுதான். அப்பிரம்ம ஞானமே மாண்பு மிக்க மக்கட் பிறவியை அடைந்தவரால் அடையத்தக்கது.

பக்தி ரஸாயனம்

(G. கிருஷ்ணமூர்த்தி ஐயர், B. A., B. L.)

(தொகுதி 30-274-ம் பக்கத் தொடர்ச்சி)

15. நன்ருக இளகிய மனதில் கோவிந்த வடிவத்தின் மீது எழும் பக்தி உள்நுழைந்து ஸ்திரமாக இருக்கும் நிலைமையை முன்பு வருணித்தோம். இம் மனே நிலைமையின் சிறப்பான பாகம் இனி விவரிக்கப்படுகிறது. பல வகையாக ரசத்தை அனுபவிப்பதற்கு மனதிற்கு ஒரு விசேஷ சக்தி உண்டாக வேண்டும். ஒரே பொருளில் மனது எல்லையற்ற பிரேமையை அடையும் நிலைமை ஏற்படுவதே வெகுநாட் பயிற்சியின் பயனுகத்தான். உண்டான பிரேமை உச்சநிலையினை (ஸ்தாயி பாவத்தை) அடைய வேண்டுமெனில், பகவானுடைய அருளால் ஆத்மபாவனே ஏற்பட்டு, தியானத்தில் நிலை நிறுத்தப்படும் வஸ்துவை, எவ்வளவு இடையூறுகள் நேரும் போதும் மறக்காதிருக்கும் வலிமையைப் பெறல் வேண்டும். இது நீண்டகாலப் பயிற்சியினுல்தான் கைகூடும். பல பிறவிகளில் பயின்ற ஜபம், ஹோமம், தவம், முதலியவற்றின் பயனுக, யோகிகள் யம நியமப் பிராணுயாமங்களாகிய சாதனங்களால் மனத்தைக் கட்டுப்படுத்தி யோகிகட்குப் பிரீதியாயிருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானது வடிவில் திருவடிமுதல் திருமுடிவரை ஒவ்வோர் அவயவமாக, (காட்சி பெற்ற மஹரிஷிகள் நேரிற் கண்டதை வருணித்தபடியே) தியானம்செய்து பழகிவருவார்கள். முடிவில் முழுவடிவத்தையும் மனதில் நிலை நிறுத்த முயலுவார்கள். பிரேமையின் ஸ்தாயி பாவம் (உச்ச நிலை) என்பதன் இலக்கணம் பின்வருவது. ஒரு பக்தன் 'ஹரி' என்ற இரண்டு அக்ஷரங்களைத் தன் வசமின்றி உச்சரிக்கிருன். இதற்கு முன்பே இவனுடைய மனப் பக்குவத்தை அறிந்த ஸ்ரீகிருஷ்ண பகவான் அடிக்கடி அவனது உள்ளத்தில் வசித்து, அவனுடைய கொஞ்சுங் குணத்தை அனுபவித்திருப்பதால், உடனே அவனுடைய நெஞ்சில் விரைந்து எழுந்தருளுகின்ருர். அப்போது பக்தன் (பிரணயம்) அன்பு என்னும் கயிற்றினுல் மனதோடு கண்ணனைக் கட்டிவிடுகிருன். அதற்குப்பின் கண்ணன் அம்மனத்தை விட்டு நீங்குவதில்லை. இதற்கு உதாரணமாகக் கோபிகைகள் உத்தவரிடத்தில் வருணிக்கும் தமது மனநிலையைக் கருதலாம். அந்நங்கையர் கூறுவதாவது; "இந்தப் பிருந்தாவனம், இந்தப் புல்வெளிகள், இப்பசுக்கள், புல்லாங்குழலோசை—இவையெலாம் மீண்டும் மீண்டும் நந்தகோபனது செல்வக் குமரனுகிய எமது கண்ணபிரானை நினைவூட்டுகின்றன. யோகிகள் எத்தனையோ சாதனங்கள் பழகித் தியானிக்க முயலும் கிருஷ்ண வடிவத்தை, நாங்கள் அதினினும் பதின் மடங்காக முயன்று மறக்கப் பார்க்கிருேம், ஆனுல் மறக்க முடிவதில்லையே. எங்களது மனம் மறக்கும் தன்மையை மறந்து விட்டது போலும்!" பிரேமை இவ்வண்ணம் முதிரும் போதுதான் சாதாரண பக்தி விசேஷ பக்தியாக மாறும்.

16. இனி, விசேஷ பக்தியின் விசித்திரமான உணர்ச்சிகளைப் படிப் படியாக எடுத்துரைப்போம். ஆரம்பத்தில் கண்ணபிரானது வடிவத்தில் காமம் எனும் விருப்பமும், அதன்மீது மனதிற்கு ஏற்படும் உறவும், அவனைக் கண்டு அனுபவிக்கும் தூய பேரவாவும் முளைக்கின்றன. பின்பு, கண்ணனது முன்னிலையில் இருத்தலும் அவனது மறைவும் என்னும் இருவகை மனே பாவங்கள் உண்டாகின்றன. இவை முறையே 'ஸம்போகம்' (ஸம்ஸ்லேஷம்——கூடியிருத்தல்) 'விப்ரயோகம்' (விச்லேஷம்—பிரிவு) என்றும் பெயர் பெறும். இவற்றின் பயனுக பகவானை அனுபவிக்கும் பேரவாவாகிய நிஷ்டை உண்டாகும். உடலின் சேர்க்கையால் காதலர்க்கு (சிற்றின்பப் பிரியர்க்கு) விளையும் சுகம் போலே, பேரின்ப வடிவினனுன பகவானது வடிவ சம்பந்தத்தால் பக்தனுடைய மனம் தூய ஆனந்த ரசத்தை அனுபவிக்கின்றது—இது கூடுதலால் அடையும் பேரின்பம். இதன் பின் வரும் விப்ரயோகம் என்னும் பிரிவு தியானத்தை ஸ்திரப்படுத்துகின்றது. கூடலால் அனுபவித்த ரசம் இதனுல் ரசாயனமாகிக் கிருஷ்ண நிஷ்டை என்னும் அமுதத்தைத் தியானத்தால் பக்தனுக்கு ஊட்டுகின்றது. இப்பிரிவும் சாதனமாகின்றது, பெரும்பயனை அளிக்கின்றது. இதற்கு உதாரணமாக்கோபிகைகளின் அனுபவம் கருதத்தக்கது. "ப்ரசமாய, ப்ரசாந்தாய, தத்ரைவ அந்தர் தீயத" என்பது அவர்களது வாக்கு. உற்சாகத்துடன் இருந்த மனதைச் சாந்தப்படுத்த வேண்டியும், கோபிகைகளின் மனதில் தன்னுடைய சொரூபத்தில் நிஷ்டையை அளிக்க வேண்டியும், கிருஷ்ணர் தோன்றியபின் மறைந்தார். இப்பிரிவின்

பயனுகக் கோபிகைகட்கு நிஷ்டை ஏற்படுகிறது. விப்ரயோகத்தினுல் (பிரிவினுல்) தியானம் நிலக்கும். இந்த சொரூப நிஷ்டைக்குப் புஷ்கள பாவம் (பூரண உணர்ச்சி) என்று பெயர்.

17. சினம் (குரோதம்) பொருமை (ஈர்ஷை) என்னும் இரண்டும் சித்தத்தினைச் சூடாக்குகின்றன. இவ்விரண்டினின்றும் துவேஷம் (வெறுப்பு) உண்டாகிறது.

சினமும் பொருமையும் மனத்தைத் துன்புறுத்தும். விப்பிரயோக காலத்தில் (பிரிவுக் காலத்தில்) பிரீதியான வஸ்துவின் தரிசனம் இல்லாததினுல் வெறுப்புக்கூட உண்டாகலாம். அதனுல் மனதிற்கு வியாகுலம் (துக்கம்) என்ற வியாதி உண்டாகிறது. அதற்குப் பின் பயம் ஏற்படுகின்றது. இதற்கு ஓர் உதாரணம் பின்வருவது. கூடியிருந்த காலத்துக் கோபிகைகள் கிருஷ்ணனை ஆலிங்கனம் உபசாரம் முதலியவற்ருல் அனுபவித்துப் பிரீதியோகத்தை அடைகின்றனர். ஒரு கோபிகை தனது புடவையின் மேலாக்கினை விரிக்க, யோகியர் தமது இருதயத்தில் கிருஷ்ணன் வந்தமர்வதற்காக ஆசனம் இட்டிருந்தனர். ஆனுல் கிருஷ்ணன் இருதய ஆசனத்தைப் பெருமையாகக் கொள்ளாது, கோபிகையின் புடவையின் முன்தானையில் உட்கார்ந்தனர். கிருஷ்ணனைச் சுற்றி நர்த்தனம் என்னும் ஆனந்தக் கூத்தும் ஆடுகின்றனர். அப்போது கிருஷ்ணன் மறையவே, அதனுல் பிரிவு என்னும் ரஸம் உண்டாகி, முற்கூறிய சினம், பொருமை, வியாகுலம் (துயரம்), பயம் என்னும் உணர்ச்சிகளைத் தோன்றச் செய்கின்றது. இதை அந்த நங்கையர் தமது 'கோபிகா கீதத்தில்' காட்டியுள்ளனர். அவர்களுடைய நெஞ்சங்களில் எழுந்த இப் பாவனைகள் (உணர்ச்சிகள்) பிரேமையினுல் ஏற்பட்டன. அதனுல் பிரிவுக் காலத்தும் சித்தத்திற்குச் கிருஷ்ண தியானத்தால் கிருஷ்ண வடிவம் ஏற்படுகிறது.

18. புத்ராதி விஷயத்தில் (1) சிநேகமும் (நட்பும்) (2) பால்ய—பாலக பாவனையும் (3) ஸேவ்ய—ஸேவக (ஆண்டான் — அடிமை) என்ற பாவனையும் பொதுவாக விளைகின்றன. இம்மூன்று இலக்கணங்களும் பக்திக்கு உண்டு. (1) தாஸ்யம் (அடிமை) (2) ஸக்யம் (நட்பு) (3) மிசிரிதம் (கலப்பானது) என மூன்ருகவும் பக்தியை மஹான்கள் பிரிக்கிருர்கள். பால்ய—பாலக பாவனையால் வாத்ஸல்யம் என்ற ரதியானது உண்டாகிறது. ஸேவ்ய—ஸேவக பாவனையால் 'ப்ரேயஸ்' (என்ற ரதி) உண்டாகிறது.

19. ஹர்ஷம் என்பது சித்தத்தின் உல்லாசம். அது நான்கு வகைப்படும்: 1. பரானந்தமயம்—இது ஈசனுடைய மாஹாத்மியத்தை (மகிமையை) உணர்வதனுல் ஏற்படும் பயன். 2. அதனுல் உண்டான இளகிய மனதில் சுத்த ரதியென்ற ஒரு பிரீதி தோன்றுகின்றது. 3. இலஜ்ஜை—இதனுல் வாக்கும் வேடமும் செயலும் யாவும் விகாரத்தை அடைகின்றன. இதிலிருந்து சித்தத்திற்கு விகாசம் (மலர்ச்சி) ஏற்படுகின்றது. 4. வஸ்துவின் தரிசனம்—இதற்கு இலக்ஷியம் விஸ்மயமே (ஆச்சரியமே).

20. சித்தமானது விஸ்தாரம் என்ற பூரிப்பை அடைகிறது—இதற்கு உத்ஸாஹம் (மகிழ்ச்சி) என்று பெயர். இஷ்டா விச்சேதம் (பிரியம் நிறைவேருது முறிதல்) என்னும் நிலயில் கிலேசம் (துக்கம்) சோகம் (மிக்க தாபம்) எனும் இரண்டும் உண்டாகின்றன. இவற்ருல் மனம் மீண்டும் அடக்கப்பட்டு (1) தயை (2) கருணை (3) அருவருப்பு எனும் மூன்று ரசங்கள் உதயமாகின்றன. கருணையென்பது, காரணமின்றி ஏற்படும் இரக்கம். அக்கருணையின் வெள்ளம் தடைப்பட்டால் அருவருப்பு உண்டாகின்றது. அதற்குப்பின் முறையே பிரவிருத்தி ரூபமான அனுகம்பமும் (முயற்சி வடிவமாக நிகழும் இரக்கமும்) தயை வடிவான ஓர் ஊக்கமும் ஏற்படும்.

21. தான உத்ஸாகம் என்பது: 'என்னுடைய சொத்து முழுதையும் தங்களிடம் அர்ப்பணம் செய்துவிட்டேன், எனக்கு உத்யமம் என்னும் தியான விசேஷ முயற்சியைக் கொடுக்க வேண்டும்' என்ற பிரார்த்தனையே, (ஸ்வதர்மத்தை) ஒருவனுக்கு இயல்பான கடமையைப் பாதுகாக்க வேண்டிச் செய்யும் முயற்சியால் ஏற்படும் பாவனைக்கு (உணர்ச்சிக்கு)த் தரும உத்ஸாகம் என்று பெயர். சமம் என்ருல் வசீகாரம் எனப்படும் பிரகாச மான சித்த நிலை.

22. இப்படிப் பற்பல ரசங்களின் உற்பத்தியால் ஸ்தாயீ பாவம் (உச்ச நிலை) அடைந்த மனதிற்கு விபாவம் ஏற்படுகின்றது. சமம் மூன்று விதம்: 1. தர்மோத்ஸாகம் 2 தயோத்ஸாகம். 3. ஜுகுப்ஸை. இதைத் துணைக் கொண்டு பக்தர்களை நான்கு விதமாக வகுக்கலாம்: 1. தர்மவீரன் 2. தயாவீரன் 3. பீபத்ஸன் 4. சாந்தன். பரம ஆபத்தை அடையினும் தருமத்தைப் பின்பற்றுபவன் தரும வீரன்; விபீஷணனைப் போன்றவர் இவ் வகுப்பினர். உயிர் உள்படச் சொத்து முழுவதையும் விருந்திற்கு அர்ப்பணம் செய்பவன் தயாவீரன்: ரந்திதேவர் இதற்கு உதார

ணம். மிக்க பயத்தினாலேயே இறைவனின் அனுக்கிரகத்தைப் பெறுபவர்கள் பீபத்ஸர். (பீபத்சு—அருவருப்பு என்னும் ரஸம்). பயத்தினால் கிருஷ்ணனது அருளைப் பெற்ற கம்சனும், ராமனது அருளைப் பெற்ற மாரீசனும் இவ்வகைக்கு உதாரணங்கள். சாந்தனுவான் எவ்வித இடையூறு நேரினும் கலக்கமற்ற மனத்தொடு நாராயணனிடத்தில் பிரேமை அடைந்தவன்; பிரஹ்லாதன் இவ்வகையான பக்தன்.

இந்துமத ஸாரம்

(தொகுதி - 30 - 332ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலியுணர்ச்சி திடப்பொருள்களாலும் திரவப் பொருள்களாலும் வாயுப்பொருள்களாலும், அப்பொருள்கள் வழியாகவும் தூண்டப்படுகின்றன என்னும் உண்மையை இந்து மத சாஸ்திரங்கள் மறுப்பதில்லை; இவை ஆகாசத்தின் விகாரங்களாதலின், அதன் பண்பை இழக்காது கொண்டுள்ளன என்கின்றன. அதுவரை இந்து மத சாஸ்திரங்களின் முடிபுகள் தற்கால விஞ்ஞான நூலாரின் கருத்துகட்கு ஒத்துச் செல்கின்றன. ஆகாசத்தைப் பற்றித்தான் நமது சாஸ்திரங்கள் வேறுபாடான கருத்துடையன. ஆகாசத்தைப்பற்றி அவை கண்ட முடிபுகள் உண்மையிலே தற்கால விஞ்ஞான நூலாருடைய கருத்துக்கட்கு மறுதலையாகாது, அதைப்பற்றி இன்னும் மிக்க அறிவைத் தருகின்றன என்பது ஒரு சிறிது ஆராய்ச்சி செய்வார்க்கு விளங்கும்.

சாதாரணமாக நமது காதுக்குப் புலப்படும் ஒலி தூலமான சடப்பொருள்களால் உண்டாக்கப் படுகின்றது, கடத்தவும் படுகின்றது; அது ஒலியின் தூலவகையில் ஒன்று என்னலாம். ஏனெனில், சாதாரணமாகக் காதுக்கு புலப்படாத மிக நுண்ணிய ஒரு வகையொலி உண்டென்று இந்துக்கள் கருதுகின்றனர். ஆதலின், இந்து மதக் கருத்தின் படியும், தூல ஒலி சம்பந்தப்பட்டமட்டில், (ஆகாசம் பரவியுள்ள) ஒரு வெற்றிடம் அதனைக் கடத்துதற்கு இடையூறாகலாம் (ஒலியை வாயுவோ, திரவமோ, திடமோ ஆகிய ஒரு பொருளின் உட்பகுதியாகிய ஆகாசமே உண்டாக்க, ஏனைய உட்பகுதிகள் அவ்வொலியைப் பெருக்குகின்றன என்பதும், அங்ஙனம் பெருக்கப்பட்டபின் அது சாதாரணமாகக் காதுக்குப் புலப்படுகிறது எனபதும் பொருத்தமாகலாம்.)

மிக நுண்ணிய ஒருவகை ஒலியுணர்ச்சியை ஆகாசம் தூண்டுகிறது என்னும் முடிபுக்கு வருதற்கு ஏதுவாக அனுபவத்தே கண்ட சில உண்மைகளை இந்துமத இருடியர் பெற்றுள்ளனர். ஆழ்ந்த தியான நிலையில் 'அனாஹதத் தொனி' எனப்படும் ஓர் ஒலி ஒருவர்க்குக் கேட்கின்றது. இவ்வொலி மிக நுண்ணியது; மனம் மிக அமைதியாயும் ஒரு முகப்பட்டும் உள்ளபோது புலப்படுகிறது. அதற்கும் தூலப்பொருளின் அதிர்ச்சிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அனாஹதத் தொனியை உண்டுபண்ணும் தூண்டுதல்கள் எப்போதும் உள்ளன; ஏனெனில், உள்ளம் ஆழ்ந்த ஒரு முகப்பட்ட நிலையிலிருக்கும் போதெல்லாம் கூரிய பக்குவமான செவிப்புலனுக்கு எப்போதும் அது எட்டுவதாகும். இவ்வுணர்ச்சியைத் தூண்டுவதற்குரிய ஒரே ஊடு பொருளாவது ஆகாசமே. (ஆகாச வாணி, தைவ வாணி, அசரீரி வாக்கு எனப்படும் நிகழ்ச்சியும் இதற்கு வேறோர் உதாரணமாகலாம்.) கிரேக்கருடைய புராணத்தில் கேள்விப்படும் 'அண்ட கீத'மும் இம்மாதிரியான ஓர் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கலாம். இந்துக்கள் 'ஸ்போடம்' என்றழைக்கும்—படைப்புக்கு ஆதியான—நாதப்பிரம்மம் எனும் கருத்தும். அனைத்தினும் மிக நுண்ணிய எங்கும் பரந்த ஊடுபொருளான ஆகாசமே அந்த ஒலிக்கு மூலமும், அதைக் கடத்தும் பொருளும் ஆகலாம் என்பதைக் குறிக்கின்றது. ஏனெனில் தூலப்பொருள் அந்நிலையில் இருப்பதில்லை.

இன்னும், ஆகாசத்தினின்றும் பூமி பிறக்கும் கிரமமும் விஞ்ஞான நூலாருடைய முடிபுகளில் எதற்கும் மறுதலையாகாது. விஞ்ஞான நூலார் இதுவரை அக் கிரமத்தைக் கண்டபடி, பிரபஞ்சத்தின் பரிணமம் புகை நக்ஷத்திரத்தினின்றும் தொடங்குகிறது; இப்புகை நக்ஷத்திரமும் அனலையும் ஒளியையும் வீசும் ஒரு வாயுப்பொருள் என்று வருணிக்கப்படுகின்றது. ஆதலின் விஞ்ஞானிகள்

தொடங்கும் இடம், இந்து மதக் கொள்கைப் படி, வாயுவும் தீயும் முன்னரே உண்டாயுள்ள ஒரு நிலையே.

கோள்கள் உண்டாகும் முறை புகை நக்ஷத்திரத்தினின்றும் தொகுதிகள் பிரிவதிலிருந்து தொடங்கி, அதன்பின் இவ்வாறு பிரிவுபட்டவை படிப்படியாகக் குளிர்ந்து உறைவதால் முற்றுப் பெறுகின்றது என்பது விஞ்ஞானிகள் கருத்து. வாயுக்கள் முதலில் குளிர்ந்து திரவப்பொருள்கள் (நீர்) ஆகி, பின்னர் கட்டியாக (நிலம்) உறைகின்றன என்பது கவனிக்கத்தக்கது. இந்துக்கள் கூறும் பரிணாம (விரிவு) முறையில் அடங்கிய கருத்தும் இக்கிரமத்தை ஆதரிக்கின்றது.

இந்து மத சாஸ்திரங்கள் ஆகாசத்தினின்றும் தொடங்குகின்றன; அதுவே முதல் முதலாகத் தோன்றிய சடப்பொருளாகின்றது. அதினின்றும் வாயுவும் (வாயுப் பொருள்களும்), வாயுவினின்றும் அக்கினியும் (சூடும் ஒளியும்) உண்டாகின்றன. படைப்பில் புகை நக்ஷத்திர நிலைக்கு முந்திய நிலைக்கே இப்பகுதி உரியதென்பது வெளிப்படை; ஆனால் இதைப் பற்றி விஞ்ஞான நூல் மோனமாயுள்ளது. புகை நக்ஷத்திரம் உண்டாகு முன், வாயுப் பொருள் சூடும் ஒளியுமாய பொருளுக்கு (அக்கினிக்கு) முன் உண்டானதா பின் உண்டானதா என்னும் வினா எழுகின்றது. ஆகாசமே அதனினும் அதிகத் தூலமான வாயுப் பொருளாகப் பரிணமித்திருக்கலாம்; அது உரசுதலினால் சூட்டையும் ஒளியையும் உண்டாக்கியிருக்கலாம். இது யுக்திக்கு மாறானதன்று, அவ்வாறு நிகழ்ந்திருத்தல் கூடும் என்றும் தோன்றுகின்றது.

தூல ஆகாசமே முதன்முதலாக வெளித் தோன்றிய சடப் பொருளானது போல், தூலப்பிராணனே முதன் முதலாக வெளித் தோன்றிய சடசக்தியாகின்றது. இச்சக்தி ஆகாசத்தின் மீது தாக்குதலால் வாயுப் பொருள் (வாயு) உண்டாகின்றது; வாயுவின் மீது தாக்குதலால் தீ உண்டாகிறது; இன்னும் மேலே மேலே இவ்வாறு நிகழ, முடிவில், இத்தூலப் பிரபஞ்ச முழுமையும் உண்டாகின்றது. இப் பிராணன் எனும் சக்தி தாக்குதலாலே, மிக நுண்ணிய ஒரு படித்தான பொருளாகிய ஆகாசம் நுண் கூறுகளைக் கொண்ட மிகத்தூலமான வாயுப்பொருளாகப் பரிணமித்திருக்கலாம். அதன்பின் பிராணன் வாயுவின் மீது தாக்குதலாலே, அதன் நுண்கூறுகள் அதிர்ச்சியடையத் தொடங்கியிருக்கலாம்; அதன் பயனாகச் சூடும் ஒளியும் (அக்கினி) உண்டாயிருக்கலாம். ஆதலால் வாயுவினின்றும் அக்கினி உண்டானது எனும் கருத்தில் யுக்திக்கு ஒவ்வாத யாதொன்றும் இருப்பதாக இல்லை.

மேலும், தன்மாத்திரைகளின் தாமசிகப் பகுதிகளிலிருந்து தூல பூதங்கள் உண்டான வகையும் கவனிக்கத் தகுந்தது. தூல பூதங்கள் சடவுலக வாழ்க்கைக்கு ஆதாரமாதலின் தம்மிடத்தே சடத்துவம் எனும் பண்பு தலையெடுக்கப் பெற்றுள்ளன. இவ்வித உற்பத்தி மிகப்பொருத்தமானதாகவே தோன்றுகிறது. பிரகிருதியிலுள்ள தாமசிகப்பகுதியின் வாயிலாகச் சக்தி சடப்பொருளென்னும் தோற்றத்தைப் புனைந்துகொள்கிறது. அணுவை 'அடைத்து வைக்கப்பட்டுள்ள கதிர் வீசுஞ் சக்தி'யென்று விஞ்ஞானியர் கொள்ளும் கருத்திற்கு இது இணங்கியிருக்கின்றதன்றோ?

இந்து மத இருடியர்க்கு நாம் 'விகாசம்' என்றழைக்கும் முறையைப்பற்றித் தெளிவான கருத்து இருந்தது என்பதும் இங்கே குறிக்கத்தக்கது. யோக சூத்திர நூலாசிரியராகிய பதஞ்சலியார் இதனை 'ஜாத்யந்தரப் பரிணாம:' என்னும் மொழிகளாற் குறிப்பித்தார்; அதாவது ஓர் இனமோ ஜாதியோ மற்றொன்றாக மாற்றமடைதல். (ஜாத்யந்தரப் பரிணாம: பிரகிருதி ஆபூராத் - யோக சூத்திரம், IV-2) இவ்விகாச முறையின் காரணத்தை இருடியர் வரையறுத்துக் கூறியுள்ளார்; தற்கால விஞ்ஞானியர் அதனைக் கண்டறிதற்காக இன்னும் தடவிக் கொண்டிருக்கிறார் என்னலாம். ஓர் இனமோ ஜாதியோ அதனின்றும் வெளிவருவதையெல்லாம் முன்னரே உள்ளடக்கி வைத்துக் கொண்டுள்ளது என்று கருதினர். ஒரு குறிப்பிட்ட இனமோ ஜாதியோ அதன் பிரகிருதியில் (காரண நிலையில்) முன்னரேஉள்ளது; அது வெளியே வருதற்கு ஏற்றவாறு சந்தர்ப்பங்கள் ஒன்றுசேரும் போது, உள்ளிருப்பது வெளியே பாய்ந்து ஓடியது போன்று புதுப் புது வடிவங்களோடு தோன்றுகிறது, (யோக சூத்திரம்-4-3.) உயர்ந்த மேட்டிலே தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நீரைத் தக்க மடைகளைத் திறப்பதினால் மட்டுமே பள்ளத்திலே வெவ்வேறு மட்டங்களிலுள்ள நிலங்கட்கு வந்து பாயும்படிச் செய்யலாகும். இம்மாதிரியான செயல்களைப் பயிரிடுவோர் செய்கின்றனர். இம்முறையிலே தக்க சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போது ஒரு தொளை உண்டாவதாகவும், அதன் வழியாக ஓர் இனத்திலோ ஜாதியிலோ உள்ளடங்கிய சக்தி (பிரகிருதி) வெளியே பாய்வது போன்று புதுவடிவங்களை உண்டாக்கி, ஒரு புது இனத்தையோ

ஜாதியையோ அமைக்கின்றது. (சுவாமி விவேகானந்தரின் முழுத்தொகுதி நூல்கள்-பகுதி 1-5ம் பதிப்பு பக்கங்கள் 291 முதல் 293 வரை.)

அவ்யக்தத்தினின்றும் தோன்றிய சிருஷ்டி முழுதும், பிரம்மா முதலாக மிகத்தூலமான அனைத்தினும் சிறிய பொருள் ஈறாகவுள்ள படைப்பு முறை முழுதும் விகாச முறையேயாம் என்பதும், பிரளய காலத்தில் உள்ளடங்குதலான 'ஒடுக்க' முறையால் (அதாவது, மீண்டும் காரண நிலைக்குச் செல்லல்) அது இயலுமாறு ஆக்கப்படுகிறது என்பதும் இந்து மதத்தின் கருத்தாகும். இந்துமதப்படி, இவ் விகாச முறைக்குப் பின்னின்று அதன் பரம காரணமாயமைவது இறைவனது சங்கற்பமே என்பதும் இங்கு கருதத்தக்கது. (இந் நூல் அத்யாயம் 18 ஐக் காண்க)

அத்யாயம்—18

பிரம்மாண்டம் (தொடர்ச்சி)

காரண நிலை

விதையினின்றும் முளை கிளம்புதல் போன்று, அவ்வியக்தத்தினின்றும் ஆகாச தன்மாத்திரை உண்டாவதிலிருந்து படைப்பு (சிருஷ்டி) தொடங்குகிறது என்பதை முன்னர்க் கண்டோம். அவ்யக்தம் ஆகாசமாக மாறுகின்ற ஒரு பொருளா? அன்று, அது சக்திவடிவமாயுள்ளது. ஒரே பொருள் ஒரே மெய்ப்பொருள் ஈசனே; அவ்வியக்தமோ பிரகிருதியோ அவனது சக்தியாகும்.

பிரளய காலத்தில் பெயரும் வடிவும் கொண்ட யாதொன்றும் இருந்ததில்லை; காலமோ தேசமோ நிமித்தமோ அப்போது இருந்ததில்லை. ஆனாலும் அப்போது வெறும் பாழாகவும் அது இருக்கவில்லை. ஏனெனில் ஏகமான பொருளொன்று தனது அற்புதச் சக்தியோடு தனியே இருந்தது. (ரிக் வேதம் 10-129-1,2.) சிருஷ்டிக்கு முன் ஈதனைத்தும் தூய சத்தாகவே இருந்து இரண்டாவதற்ற ஏகப்பொருளாய் இருந்தது. (சாந்—உபநி. 6—2 1) அது நினைப்பதாயிற்று: 'நான் பலவாக ஆவேனாக! என்னையே யான் பலப் பலவாக வெளித்தோற்றுவிப்பேனாக' என்று. (சாந். உபநி. 6-2-3; தைத். உபநி. 2-6.) "நான் உலகங்களை சிருஷ்டிக்கட்டும்' என்று அவர் சங்கற்பித்தார். அவர் இவ்வுலகங்களை வெளித்தோற்றுவித்தார். (ஒப்பிடுக-ஐதரே, உபநி. 1-1-1,2)

ஈசன் தானே சங்கற்பிக்கிறான்; தனது அற்புதச் சக்தியால் இப்பிரபஞ்சத்தை வெளித்தோற்றுவிக்கிறான். அவ்யக்தத்திலே இயற்கையிலுள்ள எல்லையற்ற வடிவங்களை வெளிக்கொணரும் சக்தி உள்ளடங்கியிருக்கின்றது, ஆனால் ஒவ்வொரு வடிவத்திற்கும் பின்னாலே உள்ள பொருள் ஈசனைத் தவிர வேறில்லை. எனினும், அவ்யக்தம் அவனது சக்தியாதலின், அவன்பிரபஞ்சத்தின் நிமித்த காரணம் உபாதான காரணம் எனும் இரண்டுமாகிறான். இந்துக்கட்குள் தலை சிறந்து நிற்கும் கொள்கையாகிய வேதாந்தத்தின் கருத்திதுவே. சாங்கியம் நியாயம் வைசேஷிகம் சார்வாகம் பௌத்தம் ஜைனம் எனும் மதத்தினரோ சிருஷ்டியைப்பற்றி வெவ்வேறான கொள்கைகளையுடையவராவார். இந்நாளைய இந்துமத சித்தாந்தங்கள் பலவும் ஏறக்குறைய வேதாந்தக் கொள்கையை ஒப்புக்கொள்கின்றன.

என்றாலும், ஈசன் இப்பிரபஞ்சத்திற்கு நிமித்த காரணம் உபாதான காரணம் எனும் இரண்டாகவும் இருத்தலின், தனது சுய சங்கற்பத்தினாலும் தனது அற்புதச் சக்தியாலும் ஈதனைத்தும் ஆகிறான். அவன் முதலில் ஆகாசமாகத் தோன்றுகிறான், பின் இன்னும் விகாரமடைந்து வாயுவாகிறான்; இம்மாதிரியே இம்முறை நிகழ்ந்து வர, இறுதியில் தன்னை இரணியகர்ப்பனாகத் தோற்றுவிக்கின்றான்; பின் இரணிய கர்ப்பன் வாயிலாகத் தூலமும் சூக்குமமும் ஆகிய பலப்பல உலகங்களாகவும், அவற்றிலுள்ள சடம் (அறிவற்றன) சைதன்யம் (அறிவுள்ளன) எனும் இருவகைப்படும் பலவகைப் பொருள்களாகவும் தன்னைத் தோற்றுவிக்கத் தொடங்குகிறான். ஆதலின், பிரம்மா முதல் துரும்பு வரையுள்ள, அறிவுள்ள அறிவற்ற தூல சூக்குமப் பொருள்களில் ஒவ்வொன்றும், பிரும்ம லோக முதல் இப்பூமிவரையுள்ள ஒவ்வொன்றும் தன்னால் தனது அற்புதச் சக்தியைக் கொண்டு வெளியே தோற்றுவிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட பெயரும் வடிவுமாய ஓர் உடையைப் போர்த்துக் கொண்டுள்ள ஈசனேயாம்.

அவன் உண்மையாகவே இவ்வெல்லாப் பொருள்களாகவும் விகாரமடைகின்றானா? சில வேதாந்தியர் 'ஆம்' என்கின்றனர். மட்குடங்களெல்லாம் மண்ணாற் செய்யப்பட்டி

ருப்பது போன்றும், தங்க நகைகள் எல்லாம் தங்கத்தாலும், உருக்கு ஆயுதங்கள் எல்லாம் இரும்பினாலும் ஆக்கப்பட்டிருப்பது போல் ஈசனால் ஆக்கப்பட்ட இப்பிரபஞ்சத்திலுள்ள பற்பல பொருள்களும் அவனையே உபாதான (முதற் காரண) மாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளன. நுரையும் சிற்றலைகளும் பேரலைகளும் கடல் நீரின் பரிணாமங்களாவது போல (மாறுபாடுகளாவது போல), இவையனைத்தும் அவனாலே ஆக்கப்பட்டுள்ளன. இந்து சித்தாந்தத்தின்படி, ஈசன் தானே தனது சங்கற்பத்தால் இப் பிரபஞ்சமாகி யுள்ளனன், அந்தர்யாமி நிலையில் அதன் உள்ளிருந்து அதனை ஆண்டு வருகின்றனன். இதுதான் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தினரால் போற்றப்படும் பரிணாம வாதம் என்பது. இந்நாளைய பக்தி சித்தாந்தங்கள் யாவும், முக்கியமாக வைஷ்ணவ சித்தாந்தங்களும் ஏறக்குறைய இக்கொள்கையை அனுசரிக்கின்றன.

ஆனால் வேதாந்தத்தின் பிரிவான அத்வைத சித்தாந்தமோ அதனை உண்மையான மாறுபாடன்று எனக்கருதுகிறது. பிரம்மன் மாறுபடாதது, ஒழிவிலாக் காலமெல்லாம் அது அவ்வாறே யுள்ளது. பிரபஞ்சம் உண்மையான சிருஷ்டியன்று, வெளித்தோற்ற மட்டுமே (விவர்த்தமே). பகவான் இப்பொருள்கள் அனைத்துமாகத் தோன்றபட்டும் செய்கிறார். அவரை வெவ்வேறு பொருள்களாகத் தோன்றச் செய்யும் பெயர்களும் உருவங்களும் பொய்ம்மையானவை. அவை உண்மை நோக்குமிடத்து இல்லவேயில்லை. பொய்க் காட்சி (மித்தை)யால் ஒரு கயிற்றைப் பாம்பாகக் கொள்ளுமிடத்து, நமது காட்சியால கயிறு எவ்விதத்திலும் மாறுபடுவதில்லை. அதுபோல பிரபஞ்சத்தைப் பற்றிய நமது மித்தைக் காட்சியால் பிரம்மன் சிறிதும் மாறுபாடடையாது ஒருவகை மயக்கத்திற்குள்ளாகும் போதுதான் நாம் பிரபஞ்சத்தைக் காண்கிறோம்; நிர்விகற்ப சமாதி நிலையில் நிகழ்வது போல, இம்மயக்கம் தீரும் போது, ஓர் உப்புக்கட்டி கடல்நீரில் தனது இருப்பினை இழத்தல் போல ஒவ்வொன்றும் விகாரமற்ற பிரம்மனிடம் கரைந்து விடுகிறது.

மித்தையான இப்பெயர்களையும் வடிவங்களையும் வெளிக்கொணர்வது, 'அவ்யக்தம்' 'பிரகிருதி' 'மாயை' என்னும் பல பெயர் கொண்ட ஈசனது அற்புதமான சக்தியே. இச் சக்தி அவித்தை வடிவமானது. அதனிடத்து ஆவரண சக்தி (மறைக்கும் சக்தி) விக்ஷேப சக்தி (தோற்றுவிக்கும் சக்தி)எனும் இருபகுதிகள் உள்ளன. முன்னது மெய்ப்பொருளை மறைக்க, பின்னது மித்தையான பெயர்களையும் வடிவங்களையும் (நாம ரூபங்களையும்) வெளிக் கொணர்வதால் அதன் உண்மை நிலையினின்றும் வேறுபட்ட ஒன்றாக அதை தோன்றச் செய்கிறது. ஒரு சிறு விதையுள் பல்கிளையதான அரச மரத்தின் பலப்பல பகுதிகளையும் தோற்றுவிக்கும் இயல்பினை உள்ளடக்கி வைத்திருப்பதுபோல் பிரபஞ்சத்தின் எல்லையற்ற வடிவங்களையும் வெளித் தோற்றுவிக்கும் வழிகளைத் தன்னகத்தே அந்த அற்புதச் சக்தி அடக்கி வைத்துள்ளது. இந்த அவ்யக்தத்தில்தான் முந்திய கல்பத்திருந்த எல்லா ஜீவர்களின் ஆசைகளும் அனுபவங்களும் வினைப்பயன்களும் பிரளய காலத்தில் உருக்கரந்து கிடக்கின்றன. அடுத்த கல்பத்தில் அவ்யக்தத்தின் மூலம் வெளித்தோற்றும் வடிவங்கட்குக் காரணமாகின்றவை இவையே.

ஆக, இந்த சித்தாந்தத்தின்படி, பிரபஞ்சத்திற்கு இருப்பு வியாவஹாரிகமே யன்றிப் பாரமார்த்திகமன்று. நாம் அவித்தையின் மயக்கத்திற்கு ஆளாகியிருக்கும் வரை அதுவும் உள்ளது. அம்மயக்கத்தினின்றும் வெளிவந்து, பரம் பொருளைப்பற்றிய முழு அறிவைப் பெற்றதும், அதாவது அதனோடு ஒன்றானதும், அதன் இருப்பும் ஒழிந்து விடுகிறது. இவ்வுண்மையே சாஸ்திரங்களாற் கூறப்படுகின்றது. இருடியரின் அனுபூதியினால் உறுதிப்படுகின்றது. கனவில் ஒருவன் காணும் நிகழ்ச்சிகளும் பொருள்களும், அவன் விழிக்கும்போது முற்றும் மறைந்து பொருளற்றனவாகின்றனவோ, அதுபோன்றே பிரபஞ்சமும் அதனிடத்துள்ள அனைத்தும் மெய்யுணர்வைப்பெற்றவுடனே மறைகின்றன. அப்போது உண்மையாக இருப்பது எதுவோ, அந்தப் பரப்பிரம்மத்திற்கு அவன் விழிப்புடையவனாகிறான். அதனோடு ஒப்பிடுங்கால் பிரபஞ்சம் ஒரு கனவிற்கு மேலாவதில்லை.

ஒருவன் கனக்காணுமளவும், கனப்பொருள்கள் நன்கு உண்மையாகின்றன. அதுபோன்றே அவித்தையின் மயக்கத்திற்கு உட்பட்ட ஒருவனுக்குப் பிரபஞ்சமும் அதனிடத்துள்ள யாவும் நன்கு உண்மையாகின்றன. ஆயினும் பரப்பிரம்மனை உணரும் விழிப்பு நிலையைப் பெற்றபின்

இவையனைத்தும் பயனையும் பொருளையும் இருப்பையும் இழந்து விடுகின்றன. ஆக, இப்பிரபஞ்சத்தின் இருப்பு புறத்தோற்ற மான மித்தையான வியாவஹாரிக அளவிலே தான்; அதே சமயம் பாரமார்த்திக அளவிலே அதற்கு இருப்பு இல்லை. இது பழுதையிற் பாம்பையும், பாலைவனத்திற் கானலையும், கனவில் மாளிகையையும் காண்பது போன்ற ஒன்றேயாம்.

இது இவ்வாறுதலின், பிரம்மத்தின் மீது தோன்றும் பெயர்களும் உருவங்களும் மித்தையாதலின், இப்பெயர்களையும் உருவங்களை யும் வெளித் தோற்றுவிக்கும் அவ்யக்தமோ மாயையோ அதுவும் மித்தையாம். பிரபஞ் சத்தைப் போன்றே அதனை வெளித்தோற்று விக்கும் சக்தியும் அதாவது மாயையும், முற் றும் உள்ளதுமன்று, இல்லாததுமன்று. அது வரையறுத்து உரைக்கத்தகாத ஒன்றே ('ஸத் அஸத் அநிர்வசனீய ரூப'). அத்தகைய அறி தற்கரிய ஒரு சக்தியின் துணை கொண்டு பிர பஞ்சம் சிருஷ்டிக்கப்படுகிறது. யாரால்? மாயையை ஆளுபவனுன, எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல ஈசுவரனுல். அவன் மாயாவி, மாயை அவனது மாயமந்திரம், பிரபஞ்சம் தன்னையே ஆதார உண்மைப்பொருளாகக் கொண்டு அவன் தன்மீது தானே தோற்று வித்த பொய்க்காட்சி.

(தொடரும்)

செய்தி

ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லம், மயிலாப்பூர்

இந்நிலையத்தின் 46-வது ஆண்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன் நிர்வாகக் கழகத்தார் ஆரம்பக் கல்வியையும் உயர்தரப் பள்ளிக் கல்வியையும், தொழிற் கல்வியை யும், கல்லூரிக் கல்வியையும், மாணவர்க்கு அளித்து வருகின்றனர், மயிலையில் ஒரு மாணவர் இல்லமும், தாற்காலிக ஏற்பாடாக ஆத்தூரில் அதன் ஒரு பகுதியாகிய குருகுல பாடசாலையும், மயிலையில் ஓர் ஆரம்பப்பள்ளி யும், உத்தரமேரூரைச் சார்ந்த மல்லியன் கரணையில் ஓர் ஆரம்பப்பள்ளியும், ஹரிஜன மாணவர் விடுதியும் நடைபெற்று வருகின் றன. மாணவர் இல்லத்தில் மொத்தம் 253 பேர் இலவசமாக இருப்பிடமும் உணவும் பெற்று வருகின்றனர். கல்வித்திறமையும் வறுமையும் ஒருங்கே வாய்ந்தவர்களே இதில் இடம் பெறுகின்றனர். பெற்றோரை இழந்த மாணவர்களே பெரும்பாலும் ஆதரிக்கப்படு கின்றனர். குருகுல உயர்தரப்பள்ளியில் பரீ க்ஷையில் வெற்றி பெறுவோர் அவரவரது தகு திக்குத் தக்கவாறு கல்லூரிக் கல்வியோ தொழிற் கல்வியோ பெறுமாறு ஊக்குவிக் கப் படுகின்றனர். மாணவர்களே தம் இல்ல வேலைகளை முறையாக இயற்றியும் மேற் பார்த்தும் வருகின்றனர். நல்லொழுக்கத்தி லும் சமயத்துறையிலும் பயிற்சி பெறும் பொருட்டு, கீதை உபநிடதம் ஸஹஸ்ரநாமம் புருஷஸூக்தம் முதலிய நூல்களின் பாரா யணமும், ஸ்ரீராமகிருஷ்ணர் சுவாமி விவேகா நந்தர் முதலான சமய குரவர்களின் வாழ்க் கைகளையும் உபதேசங்களையும் பற்றிய போதனையும், மஹான்களின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டமும், மார்கழிமாதப் பஜனையும், பக்திரசப் பாடல்களைப் பாடுத லும், பூஜையும், சமயப் பிரசங்கங்களும் வழக்கமாக நிகழ்ந்து வருகின்றன. மாணவர் கள் தத்தம் கல்வித்துறையில் போதிய பயிற்சி பெற்று, சர்க்கார்ப் பரீக்ஷைகளிலும் கல்லூரிப் பரீக்ஷைகளிலும் புகழொடு விளங் குகின்றனர். மாணவர்கட்கு உதவிச் சம்ப ளம் பெறுதற்கும் இலவசக் கல்வி பெறுதற் கும் வேண்டிய ஏற்பாடுகள் இன்றயவரை செய்யப்படுகின்றன. ஏழை மாணவர்க் கெனச் செய்யப்படும் இப்பணிகளை மெச் சாத பிரமுகர்கள் இல்லையென்னலாம்.

ஆயினும், பொருள்களின் விலைவாசி நாளும் உயர்ந்து வரும்போது, இலவச மாண வர் விடுதியை நடத்துவது எளிதான காரிய மன்று. மாணவர் இல்லத்தின் வரவு செலவு களைச் சரிக்கட்டிவரும் முயற்சி 1942 வரை வெற்றிபெற்று வந்ததெனினும், போரா லும் அதன் பயனுக விளைந்த பலவகை முட் டுப்பாடுகளாலும் இல்லத்தின் செலவு அதன் பின்வரவினும் அதிகமாகிவருவது தடுத்தற் கரியதாகிவிட்டது. பொது ஜனங்களின் பண உதவியையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு நடைபெறும் இந்நிலையம் பணியைச் சுருக் காது செலவைச் சுருக்க வழிகாணுமல், பொருட்செல்வம் பெற்றோரது தரும சிந்தனை

யையும், மூலதனத்தைப் பெருக்குவதற்கான முயற்சியில் பலருடைய ஒத்துழைப்பையும் அவாவி நிற்கின்றது. வித்யாதானம் பலவகையான தானங்களிலும் சிறந்தது எனும் முதுமொழியைக் கடைப் பிடித்துப் பொருள் படைத்தோர் இந்நன் முயற்சிக்குத் தாராளமாகப் பண உதவி செய்து புண்ணியமும் புகழும் ஓங்கப் பெறுவாராக. "நிதிமிகுந்தவர் பொற் குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்! அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்! ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!"

மதிப்புரை

1. குமரிமலர்.

ஒருமாதப் பத்திரிகை. பக்கம்-80. இதழின் விலை-அணு 4. ஆசிரியரும், அச்சிடுவோரும், பதிப்பாளரும் A. K. செட்டியார். விலாசம்: குமரிமலர் அச்சுக்கூடம், 100, மௌபிரேஸ் ரோட், மதராஸ்—18.

விக்ருதி ஐப்பசி இதழ் வரப்பெற்றோம். இதில் வெளியிடப்பட்டுள்ள 7 கட்டுரைகளும் உயர்தரமானவை; சமயம், தொழிற் கல்வி, முற்காலப் பண்பாடு, அரசியல் அமைப்பு, பொருளாதாரம் முதலியவை சம்பந்தமானவை; வாசிப்போரின் அறிவைப் பெருக்கி, மனப்பான்மையை விரிவாக்கி, நாட்டின் பலதிறப்பட்ட ஆக்கவேலைகளில் ஊக்கத்தை ஊட்டி, சாந்தியையும் உள்ளத்தே நாட்டும் தன்மை வாய்ந்தவை. தற்காலப் பண்பாடு முற்காலப் பண்பாடு இரண்டின் நலங்களையும், இரண்டிலுள்ள குறைகளையும் எடுத்துக் காட்டும் இப்பத்திரிகை பரந்த அறிவுபெற விரும்பும் பொதுமக்கட்குப் பயன்படுவது. சிறந்த தமிழ் நடையில் இனிய எளிய முறையில் எழுதப் பட்டுள்ளது.

2. திருவெழு கூற்றிருக்கை.

திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது; வியாக்கியானங்களுடனும் அரும்பத விளக்கத்தோடும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பதிப்பாளர்: ஸாஹித்ய சிரோமணி ஸ்தாநீகம் பார்த்த ஸாரதி ஐயங்கார். பக்கம்-60. விலை ரூ. 1. கிடைக்குமிடம்: வீரராகவ ராமாநுஜ கூடம். 294 ஸடாரத் தெரு, ஸ்ரீ ரெங்கம்.

சித்திரகவியான இப்பிரபந்தத்தின் மூலமும் படமும் வியாக்கியான அரசரான பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செய்த இரண்டு வியாக்யானங்களும், ஒன்றிற்கு அரும்பத விளக்கமும், நூலின் சுருக்கமும், நூலாசிரியர் வியாக்கியான ஆசிரியர்களின் சரித்திரங்களும், வியாக்கியானங்கட்கு அகராதியும், வியாக்கியானச் சொற்களின் சிறப்பும் மேற்கோள்களின் இருப்பிட விவரங்களும், பிறவும் அடங்கியுள்ளன. பிரபந்தம் வியாக்கியானம் இரண்டின் சீர்மையையும் நன்கு வெளிப்படுத்தும் ஆர்வத்தோடும், தேமதுரத்தமிழோசையை நாடெலாம் பரப்பும் நல்லவாவொடும், தாம் இன்புறுவது போன்றே உலகத்தை இன்புறுத்தும் ஆசை மேலீட்டாலும் வைணவ ஞானச்செல்வரான பதிப்பாளரால் தொடங்கப் பட்டுள்ளது இம்முயற்சி. நவீனமான நன்முறையில் எவ்வாறு மற்றைய பிரபந்தங்களும் வெளியிடப்படல் வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக இலகுகின்றது இந்நூல்.

"மனிதன் கடவுளை நோக்கி நடந்து வரும்போது, பகவான் மனிதனை நோக்கி ஓடி வருகிறார்"—கொரான்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரது பிறந்தநாள்—வெள்ளிக்கிழமை, மார்ச்சு 9, 1951